# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 08 வெள்ளிக்கிழமை (21.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :56


21 JAN 200

# ஐ.தே.கவின் ஆதரவை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்யக்கூடாது!

## அக்கட்சி வலியுறுத்துகின்றது

கொழும்பு,ஜனவரி 21

**நாடு எதிர்கொண்டுள்ள தேசியப் பிரச்சினையிலிருந்து நாட்டை மீள்விப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குகின்றது. ஆனால், ஜனாதிபதி அதைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. ஆழிப்பேரலையின் பெயரால் ஜனநாயகத்தையும் அடித்துச் செல்வதற்கு இடமளிக்கமுடியாது.**

**- இப்படிக் கூறியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.**

சர்வதேச மட்டத்தில் கிடைத்துள்ள தேசிய அனுதாபத்தை ஜனாதிபதி தனக்கான அரசியல் அனுதாபமாக்கித் தவறான வழிக்கு இட்டுச்செல்ல முனைகின்றார் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் அரசின் திட்டங்களுக்கு ஐ.தே.க. முழுமையான ஆதரவைக் கொடுக்கும். அதேவேளை, தனிப்பட்ட முறையில் மறுசீரமைப்புப் பணிகளிலும் ஐ.தே.க.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேரலையில் பலியான மேஜர் எழிலரசனின் நினைவு நிகழ்வு சம்பூரில்

கொழும்பு, ஜன.21

முல்லைத்தீவில் ஆழிக்கடல் அனர்த்தத்தின் போது பலியான விடுதலைப் புலிகளின் கடற்கரும்புலி மேஜர் எழிலரசனின் (நாகேந்திரன் அமுதன்) நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அவர் திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான ஈச்சிலம்பற்றைச் சொந்த இடமாகக் கொண்டவர். அங்கேயே நினைவு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வை அடுத்து, அவரின் புகைப்படத்துடனான ஊர்வலம், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான

(16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர் அனுமதி அடுத்தாண்டு 2000 ஆல் அதிகரிப்பு

கொழும்பு.ஜன.21

அடுத்த கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியின்போது மேலதிகமாக இரண்டாயிரம் மாணவர்களை சேர்த்துக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இம்முறை பல்கலைக்கழக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இரண்டு அனுமதிப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன என மானியங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக் குழுவினர் கொழும்பில் பேச்சு; நாளை வன்னியில் புலிகளுடன் சந்திப்பு

கொழும்பு.ஜன.21

நோர்வே உயர்மட்டக் குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்தனர்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த இக்குழுவினர் இன்று ஜனாதிபதியைச் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை அவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று தலைவர் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவைச் சந்திப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேயின் சர்வதேச மேம்பாட்டுக்கான அமைச்சர் ஹில்டா ஜோன்ஸன் அம்மையார், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஆகியோர் அடங்கிய குழுவே நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது. அக்குழுவினரோடு ஏற்கனவே கொழும்பில் தங்கியிருந்த விசேட

(16ஆம் பக்கம் பார்க்க)

## இயற்கைப் பேரனர்த்தங்கள் நிகழப்போவதாக வதந்திகள்!

### பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இதனால் பீதி

யாழ்ப்பாணம்.ஜன.21

மேலும் இயற்கைப் பேரனர்த்தங்கள் நிகழவிருப்பது பற்றிய வதந்திகள் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பரவிப் பெரும் பீதியை உருவாக்கிவிட்டுள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி முகாம்களிலும் வேறு இடங்களிலும் இந்த வதந்திகள் பரவிவருவதால் அந்த மக்கள் பெரிதும் பீதியடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

தொடர்ந்து மூன்று தினங்களுக்கு இருள் கவியுவுள்ளது என்றும் -

பாரிய விண்கல் ஒன்று இலங்கை மீது எந்த வேளையிலும் மோத உள்ளது. அதனால் நெருப்பு மழை பெய்யும் என்றும் கூட வதந்திகள் பரவி

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேக்கரிகளுக்கு குறைந்த விலையில் மாவை விநியோகிக்க அரசு முடிவு!

கொழும்பு.ஜன.21

பாண் தயாரிக்கும் பேக்கரிகளுக்கு அரசு நேரடியாகக் குறைந்த விலையில் மாவை விநியோகிக்க முடிவுசெய்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் தமக்கு நாளாந்தம் தேவைப்படும் மாவின் அளவைக் குறிப்பிட்டும் தமது பேக்கரியில் தொழில் புரிபவர்களின் விவரங்கள் மற்றும் பேக்கரியின் பதிவு இலக்கம் ஆகிய விவரங்களைக் குறிப்பிட்டும் வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சுக்கு உடனடியாக அறிவிக்குமாறு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கோரியுள்ளார்.

நேற்று ஊடகங்கள் மூலம் பேக்கரி உரிமையாளர்களுக்கு அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார் .

கோதுமை மாவை அரசு அத்தியாவசிய உணவுப் பொருளாகப் பிரகடனம் செய்துள்ளது. பிறிமா

(16ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்புப் பணிகள் பாகுபாடின்றி நடப்பதை அவதானிக்கத் தனிப் பிரிவு

### மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.21

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்பிலிருந்து மீள்வதற்காகச் சர்வதேச சமூகம் அள்ளி வழங்குகின்ற உதவித் தொகைகள் பாதிக்கப்பட்ட சகல சமூகங்களுக்கும் பாகுபாடின்றிப் பயன்படுத்தப்படவேண்டும்.

உதவிகள் வெளிப்படையாகவும் எல்லோருக்கும் புலப்படக்கூடிய வகையிலும் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்.

இந்தவகையில், நிவாரண மற்றும் நிர்மாணப்பணிகள் சம்பந்தமான செயற்பாடுகளை மனித உரிமைகள் கோணத்தில் இருந்து கண்காணிப்பதற்கு விசேட பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்திருக்கின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடகங்களுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாரிய அழிவுகள் மற்றும் பாதிக்கப்பட்டோ

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு நீதியரசர்கள் ஜனாதிபதியால் நியமனம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் நேற்று ஆறு புதிய நீதியரசர்கள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிமல் காமினி அமரதுங்க, மேன்முறையீட்டு நீதி மன்றத் தலைவர் நீதியரசர் சலீம் மர்சூக் ஆகியோர் உயர்நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியரசர் ஏ.எம்.சோமவன்ஸ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டபிள்யூ. எல்.ஆர்.சில்வா, சிசிர டி. அப்ரே, ஈ.எல்.பஸநாயக்க ஆகியோர் மேன்முறையீட்டு நீதியரசர்களாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். (த-க)

## கடன்களை மீளளிக்கும் எல்லையை சர்வதேச நாணய நிதியம் நீடித்தது

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் உதவிகளை அது மீளச்செலுத்துவதற்கான கால எல்லையை சர்வதேச நாணய நிதியம் நீடித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் இலங்கை செலுத்த வேண்டிய 11கோடி 40லட்சம் அமெரிக்க டொலர்களை அது உடனடியாகச் செலுத்தத் தேவையில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக சர்வதேச உதவிகள் கிடைத்து வருகின்றன எனவும் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும், ஸ்திரத்தன்மைக்கும் வெளிநாடுகளின் நிதி உதவி பேருதவியாக இருக்கும் எனவும் அவர் கூறினார். அவசர நிதி உதவிகள் தொடர்பான கோரிக்கைகள் இலங்கையினால் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-க)

## அக்கரைப்பற்றில் 2 வீடுகளிலிருந்து பொலீஸாரால் ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு.ஜன.21

அக்கரைப்பற்றுப் பகுதியில் பொலீஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புச் சோதனையின்போது இரு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்றுப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்தே விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து அக்கரைப்பற்று மாவடிச்சந்திக்கு அருகில் உள்ள இரண்டு வீடுகளில் அவர்கள் தேடுதல் நடத்தினர். அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கியொன்று, 13ரவைகள், இரண்டு கைக்குண்டுகள், கையுறைகள், நான்கு மகஸின்கள் என்பனவும்டெனேட்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் மறைத்துவைக்கப்பட்டிருந்த வீடுகளில் ஒன்றின் உரிமையாளரான வாயத்து மொஹமட் என்பவர் அப்போது அந்த வீட்டில் இருக்கவில்லை என்று பொலீஸார் கூறினர். வீட்டிலிருந்த இஸ்மாயில்லெப்பை என்பவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க-12)

# நிவாரணம் வழங்குமாறு கோரி திருக்கடலூர் மீனவர் வீதிமறியல்

திருகோணமலை,ஜன.21

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி திருகோணமலை, திருக்கடலூர் மீனவர்கள் நேற்றுக்காலை முதல் கொட்டும் மழைக்கு மத்தியில் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கடலூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் மீனவக் குடும்பங்களே காலை 9 மணிமுதல் தமக்கான நிவாரணம் வழங்கக் கோரி வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டும் மழை என்றும் பாராது பெண்கள், பிள்ளைகள் என நூற்றுக்கணக்கானோர் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இராணுவப் பொறுப்பதிகாரி ஆகியோர்களின் வாகனங்களையும் அவர்கள் செல்ல விடாது தடுத்துத் திருப்பியனுப்பினர்.

திருக்கடலூர் கரையோரப் பிரதேச மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். சுமார் 800 குடும்பங்கள் வாழும் மேற்படி பிரதேசத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. ஆனாலும், இதுவரையும் இவர்களுக்கான நிவாரண உதவிகளோ, கூடார வசதிகளோ வழங்கப்படவில்லை. அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்; பதிவுகளை மேற்கொள்கின்றனர். ஆனால், அனர்த்தம் நடந்து ஒரு மாதமாகும் நிலையிலும் இன்னும் எங்களைக் காட்சிப் பொருளாகவே பார்க்கின்றனர். நிவாரண உதவிக்கு எதுவித நடவடிக்கைகளையும் அதிகாரிகள் மேற்கொள்ளாது உள்ளனர். இதனை எதிர்த்தே இந்தப் போராட்டத்தை மேற்கொள்கின்றோம் எனப் போராட்டத்தில் கலந்துகொண்டோர் கூறினர்.

மறியற்போராட்டத்தில் கலந்துகொண்ட வள்ளிநாயகம் (வயது 65) என்ற பெண்மணி கருத்துக்கூறுகையில், மீன்பிடியை நம்பி வாழும் நாங்கள் இன்று நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளோம். ஒரு படகில் நான்குபேர் கடலுக்குச் சென்றுவந்தனர். அந்தப் படகு செல்லவில்லை என்றால் நான்கு குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். இன்று இப்படி நூற்றுக்கணக்கான படகுகள் சேதமடைந்துள்ளன. அவற்றை நம்பியிருந்த அனைத்துக் குடும்பங்களும் பாதிப்படைந்துள்ளன - என்றார்.

சமுர்த்தி உணவு முத்திரையும் இன்னும் வழங்கப்படவில்லை. பிள்ளைகளை வீடுகளில் வைத்துக்கொண்டு உறங்க முடியவில்லை. இரவு நேரங்களில் அவர்கள் பயப்படுகின்றனர். எமக்குத் தற்காலிகக் கூடாரம் தரப்படவில்லை. நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை. அரசிடமோ பொருள்கள் குவிகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினிடமும் குவிகிறது. ஆனால், பாதிப்படைந்த நாங்கள் பட்டினி கிடக்கவேண்டியுள்ளது - என்று அவர் மேலும் சொன்னார்.

கிராமமட்ட அதிகாரிகளாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தங்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லை என்று அந்த மக்கள் விசனம் தெரிவித்தனர். தமது பிரதேசங்களுக்கு அருகிலுள்ள சிறிமாபுர, விஜிதபுர போன்ற சிங்களப் பகுதிகளில் மக்களுக்கு அதிகளவில் நிவாரணப் பொருள்கள் கிடைக்கின்ற போதும் தாம் மட்டுமே ஏமாற்றப்பட்டு வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிவரையும் அவர்களது போராட்டம் நீடித்தது. (த-க)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வலிமேற்கு,ஜன.21

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கலாசாரப் பேரவைத் தலைவரும் பிரதேச செயலருமான சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பலர் கருத்துரையாற்றவுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் பொதுமக்கள் எனப்பலரும் இதில் கலந்துகொள்வர். (எ-175)

# குடும்பப் புனர்வாழ்வு நிலையம் மருந்துகளை வழங்கி உதவி

யாழ்ப்பாணம்,ஜன.21

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய மருந்துவகைகளை குடும்ப புனர்வாழ்வு நிலையம் வழங்கியுள்ளது. இது தொடர்பாகக் குடும்ப புனர்வாழ்வு நிலையம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

சுனாமி கடலலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ வசதியைக் கவனத்திலெடுத்து, குடும்பப்புனர்வாழ்வு நிலையம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, காலி, மாத்தறை, வவுனியா ஆகிய மாவட்ட வைத்திய அதிகாரிகளின் கோரிக்கைக்கிணங்க, மிக அத்தியாவசியமான மருந்துகளை வழங்கியுள்ளது.

இந்தவகையில், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையின் கோரிக்கைக்கிணங்க, ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளை குடும்பப் புனர்வாழ்வு நிலைய யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன், குடும்பப் புனர்வாழ்வு நிலையக் கணக்காளர் பிரதீப் கினிகே ஆகியோர் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் கையளித்தனர். அத்துடன், நலன்புரி நிலையங்களிலுமுள்ள பெண்களுக்கான பிரத்தியேக சுகாதார அணிகள் நூறையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்தனர். குடும்பப் புனர்வாழ்வு நிலையம் துரித நடவடிக்கையெடுத்து, பதினாறு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளைக் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அனர்த்த கால உளநலப் பணிக் குழுவின் திட்டங்கள் வகுக்க ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.21

அனர்த்தகால உளநலப்பணிக் குழுவின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள 'சாந்திகம்' உளவளத் துணை நிலையத்தில் நடைபெறும்.

வடக்கில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நிறுவனங்களாலும் வழங்கப்பட்டு வரும் உளசமூக நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கும், தகுந்த ஆலோசனைகள் வழங்குவதற்கும் உரிய பொறுப்பு அனர்த்தகால உளநலப் பணிக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் -

எனவே, பின்வரும் விடயங்களில் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக இன்றைய ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுவதாகவும் உளநலப் பணிக்குழு தெரிவித்திருக்கிறது.

★ பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் நீண்டகால நோக்கில் ஆற்றவேண்டிய உளச்சமூக வேலைத் திட்டங்கள் பற்றிய முன்மொழிவு.

★ அனர்த்தப் பிரதேசங்களில் ஆற்றப்படும் உளசமூக வேலைத்திட்டங்களை பொதுக் கட்டமைப்புக்குள் கொண்டுவரல்.

★ உளசமூக வேலைத்திட்டங்களில் ஈடுபடும் அலுவலர்கள், பணியாளர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

★ உளசமூக பிரச்சினைகளுக்கும் உளப் பிரச்சினைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்காணல்.

மேற்படி விடயங்கள் தொடர்பாகப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் (தலைவர் உளமருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), வைத்தியகலாநிதி சா.சிவயோகன் (உளமருத்துவர், யாழ்.பொதுவைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை), வண.பிதா இராசநாயகம் (இயக்குநர் அகவெளி), டாக்டர் சிவசங்கர், டேமியன் அடிகள் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கவுரைகளை ஆற்றவுள்ளனர். (ஐ)

# அல்வாய் அம்மன் ஆலயத்தில் 3 அடி ஆழத்தில் அதிசய நீரூற்று

அல்வாய்ப் பகுதியில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் அதிசய நீரூற்று ஒன்றைக் கண்ட மக்கள் அதனை தீர்த்தமாகக்கருதி எடுத்துச்செல்கின்றனர்.

அல்வாய்-முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மணி மண்டபத்துக்கான தூண்களை நிறுவுவதற்காகத் தோண்டப்பட்ட மூன்று அடி ஆழமுள்ள குழியொன்றிலிருந்தே இந்த அதிசய நீரூற்றுத் தோன்றியுள்ளது.

அல்வாய்ப் பகுதியில் 30 தொடக்கம் 35 அடிவரையான ஆழத்தில் நீரூற்றுக் காணப்படுவதே வழமை. இவ்வாறு மிகக் குறைந்த ஆழத்தில் சுவையுடன் கூடிய அதிசய நீரூற்று கிடைத்திருப்பது - அவ்வூர் மக்களிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இத்தகைய அதிசயம் நிகழ்ந்துள்ளமையால் அன்னையின் அருளே இது வெனத் தெரிவித்து வரும் மக்கள் மிகுந்த பக்தியுடன் அந்நீரைத் தீர்த்தம் என எடுத்துச் செல்வதைக் காண முடிகிறது. (எ-70-ரி)

# இரண்டாவது பதவிக்காலத்தை நேற்று ஆரம்பித்தார் புஷ்

வாஷிங்ரன்;ஜன.21

தனது இரண்டாவது பதவிக்காலத்தை ஆரம்பித்தார் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ். நேற்று அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் உள்ள வெள்ளைமாளிகையில் தனது இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலத்திற்காகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

செப்ரெம்பர் 11ஆம் திகதிய தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதி பதவிப்பிரமாணம் இதுவென்பதால் தலைநகர் வாஷிங்ரனில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகப் பலமாகப் பலப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ள அமெரிக்கா முழுவதிலுமிருந்து ஏராளமானவர்கள் வந்திருந்தனர். ஜோர்ஜ் புஷ்ஷின் பதவியேற்பு விழா மூன்ற நாள் கொண்டாட்டமாகக் கொண்டாடப்படுகிறது.

அரச ஊழியர்கள் வீட்டிலிருந்தவாறே தமது வேலைகளைச் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அனைத்து ஊழியர்களுக்கும் நேற்றுச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பதவியேற்பு நிகழ்வுக்குச் செல்வதற்கு முன்னர் இராணுவச் சிப்பாய்களுக்கு ஜோர்ஜ் புஷ் மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து பிரார்த்தனை நிகழ்ச்சியொன்றிலும் பங்கேற்றார்.

பதவியேற்பு நிகழ்ச்சி குறித்து ஜோர்ஜ் புஷ் கூறுகையில் தெரிவித்ததாவது:-

பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் அமெரிக்காவின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பாதுகாப்புப்படையினருக்கு மரியாதை செலுத்துவது மிகவும் பொருத்தமான விடயம். அமெரிக்க மக்களுக்குத் தீங்கு ஏற்படுத்த நினைக்கும் தீவிரவாதிகளின் சவாலை நாங்கள் எதிர்கொள்வோம். சுதந்திரமாக வாழலாம் என்ற நம்பிக்கை உலகம் முழுவதும் இப்போது பரவிவருகிறது.

இவ்வாறு புஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சுமார் 17 நிமிடம் மக்கள்முன் உரையாற்றினார். இந்த உரையை எழுதியவர்கள் அதனை 21தடவைகள் திருத்தி, ஒப்புநோக்கியுள்ளனர். (க-8)

**உலக அரங்கில்**

## வீரப்பனின் சிலையை திடீரெனக் காணோம்

கௌத்தூர்,ஜன.21

தமிழகத்தின் மூலக்காடு என்ற இடத்தில் சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் சமாதியில் அமைக்கப்பட்டிருந்த வீரப்பன் சிலை திடீரென இரவோடு இரவாகக் காணாமற்போயுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் வீரப்பனின் சமாதியில் துப்பாக்கி ஏந்தியபடி 4 அடி உயரமான வீரப்பனின் சிலை அமைக்கப்பட்டிருந்தது. கையில் இருக்கும் துப்பாக்கியில் 'நன்மையே செய்' என்ற வசனமும் எழுதப்பட்டிருந்தது. இதற்குக் காரணமானவர்கள் குறித்த விரம் தெரியவில்லை. இதனால், மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

இதுதொடர்பாக கௌத்தூர் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விசாரணையில் வீரப்பனின் உறவினர்கள் இந்தச்சிலையைக் கொண்டுவந்து வைத்துச்சென்றது தெரியவந்தது.

சமாதி உள்ள இடம் அரசுக்குச் சொந்தமானது என்பதால் "சிலையை அகற்ற முறைப்பாடு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று சேலம் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இதையடுத்து, மேட்டூர் அணை செயற்பொறியியலாளர் சுப்பிரமணி என்பவர் கௌத்தூர் பொலீஸில் முறைப்பாடு செய்தார். அதில், "அரசுக்குச்சொந்தமான இடத்தில் அத்துமீறி நுழைந்து அனுமதியில்லாமல் வைக்கப்பட்ட வீரப்பன் சிலையை அகற்ற பாதுகாப்பு வழங்கும்படி" கோரியிருந்தார்.

இந்நிலையில், முறைப்பாடு வழங்கப்பட்ட அன்றைய தினமே இரவோடு இரவாக வீரப்பனின் சிலை இருந்த இடத்திலிருந்து திடீரென அகற்றப்பட்டுள்ளது. வீரப்பனின் சிலை திடீரென காணாமற்போன சம்பவம் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-8)

## இந்தோனேஷியாவில் உயிரிழந்தோர் 1,66,000 பேர்

சுனாமி ஆழிப்பேரலைகளால் இந்தோனேஷியாவில் மட்டும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 66ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் என்ற புதிய புள்ளிவிவரங்களை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

முன்னதாக வெளியிடப்பட்ட எண்ணிக்கையிலும் இப்போது வெளியிடப்பட்டிருக்கும் எண்ணிக்கை சுமார் 50 ஆயிரத்தால் அதிகம்.

இந்தப் புதிய எண்ணிக்கை அடங்கிய புள்ளி விவரத்தை இந்தோனேஷிய சுகாதார அமைச்சே வெளியிட்டிருக்கிறது.

காணாமற்போனவர்கள் என்றும் முன்னர் பட்டியலிடப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கானோர் சுனாமி அனர்த்தத்தினால் கொல்லப்பட்டிருக்கின்றனர் என இந்தோனேஷியாவில் பணிபுரியும் அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவே இந்த இறந்தவர் எண்ணிக்கை உயர்விற்குக் காரணம் என்று சுகாதார அமைச்சின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுனாமிப் பேரழிவால் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இப்போது சுமார் 2லட்சத்து 20ஆயிரமாக அதிகரித்துள்ளது.(க-8)

# ஸ்ரீவைஷ்ணவ மடத்தின் நிர்வாகி காஞ்சிபுரத்தில் அடித்துக் கொலை!

காஞ்சிபுரம்,ஜன.21

காஞ்சிபுரம் உத்திராதி ஸ்ரீவைஷ்ணவ மடத்தின் தலைமை நிர்வாகி ஸ்ரீனிவாச்சாரி (வயது 40) நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மர்மநபர்கள் சிலரால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சிறுவயதிலேயே ஆன்மீக ஈடுபாடுகொண்ட இவர், பாட்னா என்ற இடத்தைச் சேர்ந்தவர். கடந்த 15 ஆண்டுகளாக இந்த மடத்தில் தங்கியிருந்து ஆன்மீக சேவையாற்றி வருகின்றார்.

வடமாநில பயணிகளுக்கு உணவு, தங்குமிடம் செய்து கொடுப்பதே இவரது முக்கிய பணி. மடத்தின் சேவை காரணமாக இவர் திருமணம் கூடச் செய்துகொள்ளவில்லை.

நேற்றுமுன்தினம் இவரைச் சந்திக்க ஸ்ரீபெரும்புதூர் உத்திராதி மடத்தைச்சேர்ந்த ராமன்ஜி வந்திருந்தார். இவர்கள் இருவரும் மடத்தில் தூங்கினர் என்றும் - நேற்றுக்காலையில் பால் கொடுக்கவந்தவர் எழுப்பியபோதுதான் ஸ்ரீநிவாச்சாரி உயிரிழந்த விடயம் தெரியவந்தது என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகி சங்கரராமன் கொலை செய்யப்பட்ட விடயமும், அதில் தொடர்புபட்டார்கள் என்று காஞ்சி சங்கரமடத்தின் சங்கராச்சாரியார், இளையமடாதிபதி ஆகியோர் கைது செய்யப்பட்ட விடயமும் ஏற்படுத்திய பரபரப்பு இன்னும் ஓயவில்லை. இந்நிலையிலேயே, காஞ்சிபுரத்தில் சங்கரமடத்திறகு அடுத்தபடியாக இயங்கும் உத்திராதி ஸ்ரீ வைஷ்ணவ மடத்தின் நிர்வாகி கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த மடத்தின் தலைமைப்பீடம் பீகார் மாநிலத்திலுள்ளது. வடமாநிலங்களில் இருந்துவரும் பக்தர்கள் இங்கு தங்கிக்கொள்வது வழமையாகும். ஸ்ரீநிவாச்சாரியாரின் கொலை தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இவரைக் கொலை செய்தவர்கள் சென்னையைச் சேர்ந்த கூலிப்படையினராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இவரைக் கொலை செய்தவர்கள் பொருள்களையோ, பணத்தையோ திருடவில்லை. எனவே, முன்விரோதம் காரணமாகவே இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகம் வெளிளிட்டுள்ளனர்.

கொலைசெய்யப்பட்ட ஸ்ரீநிவாச்சாரி மிகவும் கண்டிப்பானவர் என்று தெரியவந்துள்ளது. மடத்துக்குச் சொந்தமான நிலம், கட்டட விவகாரங்களில் பல தடவை விஷ்ணுகாஞ்சி பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். எனவே, அந்த முன்விரோத அடிப்படையில் கொலை நடந்திருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். கொலையாளிகளைக் கண்டுபிடிக்க விசேட தனிப் பொலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (க-8)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## ஆழிப்பேரலையில் ஆடிப்போன அரசியல்

ஆழிப்பேரலை நாட்டைத் தாக்கி அனர்த்தத்தை ஏற்படுத்திவிட்டுப் போய்விட்டது. ஆனால், அது உருவாக்கிய அதிர்வுகள் இன்னும் பல முனைகளில் நீடித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

அந்த முனைகளுள் ஒன்று தென்னிலங்கை அரசியல். ஆழிப்பேரலை அனர்த்தத்தை அடுத்து தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் பல புதிய திருப்பங்களுக்கு வழி செய்திருக்கின்றன.

ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் கையெழுத்திடாத கனவான் ஒப்பந்த அடிப்படையில் கைகோத்துள்ளன என்றும் -

இவற்றின் கூட்டுச் செயற்பாட்டால் அரச கூட்டமைப்பின் மற்றொரு பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. ஓரங்கட்டப்படுகின்றது என்றும் -

செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அதனை ஊர்ஜிதப்படுத்துவது போல, ஜே.வி.பி. பக்கத்தில் இருந்து சீற்றத்துடன் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கின. அந்தக் கூட்டமைப்பே கடந்த பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றியது.

அந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெறுவதை ஒட்டி நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே கூட்டமைப்பின் மற்றைய - பிரதான - பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஒரு பிடி பிடித்திருக்கின்றது ஜே.வி.பி. தங்களோடு செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் அரசின் (ஸ்ரீல. சு.கட்சியின்) நடவடிக்கைகள் அமைந்துள்ளன என இந்தச் செய்தியாளர் மாநாட்டில் குற்றச்சாட்டை எழுப்பிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, இந்த நிலை தொடருமானால் கவலையுடன் சில இறுதித் தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலைமை உருவாகும் என்றும் எச்சரித்திருக்கின்றார்.

அதாவது, தங்களை ஓரங்கட்டும் போக்கை சுதந்திரக்கட்சியினர் இனியும் தொடர்ந்தால், ஆளும் கூட்டமைப்பில் தமது பங்குபற்றலைத் துண்டித்து, ஆட்சியைக் கவிழ்த்துவிடுவர் என்ற எச்சரிக்கையைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார் சோமவன்ஸ அமரசிங்க.

ஆனால், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவிடம் இருந்து தமது அரசுக்கு இப்போதைக்கு எதிர்ப்போ குழிபறிப்போ மேற்கொள்ளப்படமாட்டாது என்ற எழுதப்படாத உறுதிமொழிக்கான சமிக்ஞைகளை ஐ.தே. கட்சித் தலைவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அந்தச் சாதகமான நிலையைக் கருத்திற்கொண்டு, ஜே.வி.பியைத் தூக்கியெறிந்து நடக்கத்தயாராகிவிட்டார்.

ஆனாலும், யதார்த்த அரசியல் நிலைமை தொடர்பான அவரது நம்பிக்கை சாத்தியமற்றது என்று சாரப்பட கோடு காட்டியிருக்கின்றார் அவரது அரசின் அமைச்சரவை உறுப்பினரும், ஜே.வி.பியின் பிரமுகருமான லால்காந்த.

"பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கவுடன் இணைந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவோம் என்கிறது அரசு. இது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து செயற்படும் சாத்தியமே கிடையாது. அப்படியொரு நிலை உருவானால் அது உலக சரித்திரம்" - என்று அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதியின் அமைச்சரவைச் சகாவான லால்காந்த.

- இவ்வாறு அரசுக் கூட்டமைப்புக்குள் முறுகலும், பிரதான ஆளும் கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சிக்குமிடையில் முறுவலும் உள்ள சூழ்நிலையில்தான் புதிய கருத்து ஒன்றை வெளியிட்டு தென்னிலங்கை அரசியலை மேலும் ஒரு குழப்புக் குழப்பியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

அடுத்த ஐந்து வருடங்களுக்குத் தேர்தலே இல்லை என்று அவர் கூறியிருக்கின்றார். மனதில் என்ன கருத்தை வைத்துக்கொண்டு இந்த விடயத்தை ஜனாதிபதி வெளியிட்டாரோ தெரியவில்லை. ஆனால், ஜனாதிபதியோடு தற்காலிகமாகவேனும் இணங்கிப் போகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த ஐ.தே. கட்சியைச் சீற வைத்திருக்கின்றது இந்த உரை.

ஜனாதிபதியின் இக்கருத்தைப் பார்த்தால் ஆழிப் பேரலை அனர்த்தத்தில் நாட்டின் ஜனநாயகமும் கூட அடித்துக்கொண்டு போய்விட்டது போலத்தான் தோன்றுகின்றது.

இப்படி அக்கருத்து, ஐ.தே.க. - சு.க. இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வை - இணக்கத்தை - கூட்டுச்செயற்பாட்டு ஏற்பாட்டை - முளையிலேயே கருகவைத்துவிடும் போலவும் தோற்றுகின்றது.

இப்படி, ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னணியில் தென்னிலங்கை அரசியலும் ஆடிப்போய்க் குழம்பி நிற்கின்றது.

# முருகைக்கல் அரண்கள் அள்ளுண்டதனால் கடற்கலங்களை நிறுத்துவதில் பெருஞ்சிரமம்

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசச் செயலர் கவலை

குருநகர்.ஜன.21

சுனாமி அலை பாதித்த வடமராட்சிக் கடற்பரப்பில் பாதுகாப்பாகக் கடற்பகுதியில் வளர்ந்திருந்த முருகைக்கல் அணைகளை சுனாமி அலை அள்ளிச் சென்றுள்ளதனால் இப்பகுதியில் கடற்றொழிலாளர்கள் தமது கடற்கலங்களைப் பாதுகாப்பாக நிறுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் பி.அ.ஞானமணி தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முருகைக்கல் அரண்கள் பொலிகண்டியில் இருந்து பருத்தித்துறை முனைப் பகுதி வரை அமைந்திருந்தன. கரையில் இருந்து சுமார் 50 யார் தூரத்தில் அமைந்துள்ள இந்த அணைக்கு அப்பால் உள்ள கடற்பகுதி ஆழம் அதிகமான கடற்பகுதியாகும். இந்த ஆழம் குறைந்த கடற் பகுதியிலேயே கடற்கலங்கள் நிறுத்தப்படுவதுடன் இங்கு அமைந்திருந்த 'வான்' ஊடாக மீனவர்கள் கடலுக்குச் சென்று வந்தனர்.

சுனாமி அலை வீச்சுக் காரணமாக இம்முருகைக்கற்கள் அள்ளிவீசப்பட்டுள்ளதுடன், 'வான்' வழியும் சிதைந்துள்ளது. இதன்காரணமாக சாதாரண காலங்களில் கூட கடலலை பலமாகக் கரையை நோக்கி வருகின்றது. எனவே, வீசப்பட்டு கடற்கரைப் பகுதியில் காணப்படும் இம் முருகைக்கற்களைப் புல்டோசர்கள் மூலம் ஒன்றாகச் சேர்த்துக் கடல் அணை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே கடற்றொழிலாளர் சிரமமின்றிக் கடலுக்குச் செல்ல முடியும். அத்துடன், தமது கடற்கலங்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க முடியும். அல்லாவிட்டால் ஆழம் அதிகமான கடற்பரப்பிலேயே தமது கடற்கலங்களை நிறுத்திவைக்கவேண்டிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-51)

# பகிடிவதை புரிவோர் பற்றி தகவல் தரக் கோருகின்றது மருத்துவ பீடம்

யாழ்ப்பாணம்.ஜன.21

புகுமுக மாணவர்கள் மீது பகிடிவதைத் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டால் சம்பந்தப்பட்டோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்திருக்கின்றது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நிர்வாகம்.

யாழ். மருத்துவ பீடத்தில் புகுமுக மாணவர்கள் மீது பகிடிவதைச் செயல்கள் புரியப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே நிர்வாகம் இந்தக் கண்டிப்பான அறிவுறுத்தலை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாக மருத்துவபீட பீடாதிபதி விடுத்திருக்கும் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதிய மாணவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் அம்மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாகத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இத்தகைய துன்புறுத்தல்களை எக்காரணம் கொண்டும் எம்மால் அனுமதிக்க முடியாதென்பதுடன், இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை அவர்களின் பெயர், மாணவர் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் எமக்குத் தெரியப்படுத்தினால், தற்போது நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக விதிகளின்படி பல்கலைக்கழக கல்வியிலிருந்து அவர்கள் விலக்கப்படுவார்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கோதுமை மாவுக்காக முகப்பூச்சுக் கிறீம் விற்கப்பட்டதை மறுக்கிறது கூ.சங்கம்

யாழ்ப்பாணம்.ஜன.21

எமது சங்கத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோதுமை மாவுக்காக முகப்பூச்சுக் கிறீம் விற்பனை செய்யப்படவில்லை. மாவினைக் கொள்வனவு செய்வோர் வேறு பொருள்களையும் சேர்த்து வாங்குவது வழமையான ஒன்றுதான்.

- இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றது தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

'ஓடி வாங்கோ... ஓடிவாங்கோ... கிறீம் வாங்கினால் கோதுமை மா...' என்று தலைப்பிட்டுக் கடந்த புதனன்று உதயனின் இரண்டாம் பக்கத்தில் வெளியிடப்பட்ட ஒரு செய்தி தொடர்பாகவே தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்படி விளக்கமளித்திருக்கிறது.

தென்மராட்சியில் உள்ள கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம் ஒன்றில் முகப்பூச்சுக் கிறீம் வாங்கினால்மட்டுமே கோதுமை மா விற்கப்படும் என்று பாவனையாளர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்று அந்தச் செய்தியில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்தத் தகவலை மறுத்து சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கம் விளக்கக் குறிப்பு ஒன்றை உதயனுக்கு அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

• 19.01.2005 திகதிய உதயன் நாளிதழின் 2ஆம் பக்கம் பிரசுரமான 'ஓடி வாங்கோ ஓடிவாங்கோ கிறீம் வாங்கினால் கோதுமை மா' என்று பிரசுரிக்கப்பட்ட செய்தி தொடர்பாக -

எமது சங்கமானது எச்சந்தர்ப்பத்திலும் கோதுமை மாவிற்காக முகப் பூச்சுக் கிறீம் விற்பனை செய்யவில்லை. ஆனால் கோதுமை மாவு விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தில் வேறு பொருள்களும் பாவனையாளர்கள் கொள்வனவு செய்வது வழமை. கிறீம் வாங்கினால்தான் மாவு என்ற பதம் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளரால் பாவிக்கப்படவில்லை. பாவிக்க வேண்டிய தேவையும் இல்லை. அவ்வாறு அக்கிளை முகாமையாளர் கட்டாயப்படுத்தியிருந்தால் பாவனையாளர்கள் எமது கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பார்கள்.

• இவ்வாறான செய்திகளைப் பிரசுரிக்கும் போது உதயன் நாளிதழானது சரியான உண்மை நிலையை அறிந்து பிரசுரிக்கப்படவேண்டிய கடப்பாடு உள்ளது. இச்செய்தியில் பிரசுரிக்கப்பட்டது போன்று விசனத்திற்குரியதோ விசமத்தனமானதொரு செயற்பாடோ அல்ல. இவ்வாறு உண்மைக்கு மாறான செய்திகளைப் பிரசுரிப்பது கூட்டுறவை மழுங்கடிக்கும் செயலெனக்கருதி கூட்டுறவாளர்களாகிய நாம் விசனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(ஐ)

*ஆசிரியர் குறிப்பு:-*

குடாநாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து கோதுமை மாவைப் பெற்றுக்கொள்வதில் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் வர்த்தகர்கள் கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு உதயன் செய்தியில் குறிப்பிட்டது போன்ற பல்வேறுவிதமான கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் விதிக்கின்றனர் என்று தெரிவிக்கும் பல முறைப்பாடுகள் உதயனுக்குக் கிடைத்து வருகின்றன.

உதயன் செய்தியில் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கக் கிளையில் கோதுமை மாவுடன் சேர்த்து முகப்பூச்சு கிறீம் விற்பனை செய்யப்பட்டதற்கு ஆதாரமாக சங்கத்தின் பற்றுச்சீட்டுக்களை பாவனையாளர்கள் பலர் நேரடியாக உதயனுக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இது விடயத்தில் உதயன் தனது மூலச் செய்தியின் நிலைப்பாட்டிலேயே உள்ளான் என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

(ஆ-ர்)

# வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம்

வலி.தெற்கு.ஜன.21

சுனாமி கடலலை பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள 13 குடும்பங்களுக்கு சுனாமி அனர்த்த நிவாரணப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் - கடற்கொந்தளிப்பினால் மரணமடைந்த ஆறு குடும்ப அங்கத்தவர்களுக்கான மரணக் கொடுப்பனவு நிதியும் வழங்கப்படவுள்ளது.

கடற்கொந்தளிப்பின்போது கீரிமலை தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடிய போது மரணமடைந்த தாவடியைச் சேர்ந்த ஐவருக்கும், வாழைச்சேனையில் உயிரிழந்த ஒருவருக்குமாக ஆறு நபர்களுக்கான மரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை -

இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் தங்கி இருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு குடும்பங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த நான்கு குடும்பங்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(எ-152)

## நாளை

*தை 09*
*(22.01.2005)*
*சனிக்கிழமை*
*திதி : துவாதசி*
*முற்பகல் 10.35 வரை*
*நட்சத்திரம் : மிருகசீரிடம்*
*முன்னிரவு 7.14 வரை*
*சனிப்பிரதோஷ விரதம்*
*சுபநேரம் : 3.36 - 5.06*
*ராகுகாலம் : 9.36 - 11.06*
*(யாவும் பழைய நேரப்படி)*

# அத்தியார் இந்துவின் பவளவிழா நிகழ்வுகள்

நீர்வேலி.ஜன.21

• நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பவள விழா நிகழ்வுகள் அதிபர் இ.குணநாதன் தலைமையில் இன்றும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இன்றைய முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் இந்திரன் காராளசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுகளில் பல்வேறு கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

கல்லூரியின் பவள விழா ஆண்டான 2004 இல் பாடசாலை மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் இன்றைய நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் நாள் நிகழ்வுகளில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(10-110-ரி)

## உதவாக்கு

பிறரை எவ்வாறு வீழ்த்தலாம் எனச் சிந்திப்பதில் உனது காலத்தைப் போக்காது உனது முன்னேற்றத்துக்கான வழியைக் காண்பதற்கு சிந்திப்பாயாக.

## மாகாண ஊழியர் சங்கப் பொதுக்கூட்டம்

குருநகர்,ஜன.21

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் திருகோணமலையில் இயங்கும் சங்கத்தின் தலைமைப் பீடத்திலிருந்து தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் வருகைதந்து கலந்து கொள்ளவுள்ளனர்.

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 5:2000 தின் பிரகாரம் இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு நாள் கடமை லீவு பெற்றுக்கொள்ளும் உரிமை உள்ளதனால் அனைத்து உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டக் கிளையின் செயலாளர் அ.கி.ராசக்கோன் அறிவித்துள்ளார்.

(எ-51)


**ஒத்துமாறல்**

பரந்தனில் ஆசிரிய நியமனம் கிடைத்துள்ள ஒருவர் யாழ்.மாவட்டத்தில் உள்ள எத்துறையில் உள்ளவருடனும் ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்புகளுக்கு: T.P: 0602 - 212934. (41122)


## வல்வை சிவகுரு வித்தியாசாலை இயங்குகிறது

வடமராட்சி,ஜன.21

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம் வல்வெட்டித்துறை சிவன் கோயில் மண்டபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கரையோரப் பாடசாலைகளை மீள இயங்க வைகக எடுத்த நடவடிக்கையினால் இவ்வித்தியாலயம் கடந்த திங்கள் முதல் மாற்று இடத்தில் இயங்கிவருகிறது.

(எ-173)


**Organ/Violin Notes**

இசைக்குறிப்புக்கள்

பாகம் 35 வெளிவந்துவிட்டது!

**Karaweena Isai Manram,**

75, Temple Rd.,

Nallur South, Jaffna. T.P.: 0777 031293 (41119)


## மட்டுவில் வடக்கு கூட்டுறவுக் கிளை புனரமைக்கப்படும்

சாவகச்சேரி,ஜன.21

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின கிளையான மட்டுவில் வடக்கு மோகனதாஸ் கிளைக் கட்டடம் இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இந்தக் கிளை கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது முழுமையாகச் சேதமடைந்திருந்தது.

இக்கிளை நிலையம் தற்போது தனியார் கட்டடமொன்றில் இயங்கிவருகின்றது.

இதேவேளை, சாவ்கச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மற்றொரு கிளையான மட்டுவில் சோமாஸ்கந்தாக் கிளையும் பலத்த சேதமடைந்த நிலையில் உள்ளது.

(எ-203-31)





திரு.திருமதி சுரேஸ்-சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் பிரஷாந்தன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நயினை நாக பூஷணி அம்மன் அருள்பெற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

பிள்ளையார் மரக்காலை
250, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

இ.சுரேஸ் - சுதா
தம்பதிகள்



உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான தாரண வருஷம் தை மாதம் 9 ஆம் நாள் நாளை (22.01.2005) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை (பழைய நேரம்) வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது ஏக புதல்வன் | எமது ஏக புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சுரேஷன்** | **தேனுகா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில் (புதிய மண்டபம்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் :

| | |
|---|---|
| திருமதி இந்திரா வேலாயுதபிள்ளை | திரு.திருமதி ஞா.குகநாதன் தம்பதிகள் |
| கல்லூரி ஒழுங்கை, | (பிரதம செய்தியாளர், உதயன்) |
| உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். | 23ஏ, ஸ்ரேசன் வீதி, கொக்குவில். |
| தொ.இல:- 077 3024476 | தொ.இல:- 0777 116519 |

நேரடியாக அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும் -



**ஒரே கூரையின்கீழ் உங்களுக்கான ஆங்கிலக்கல்வி, கணனி, தொழில்நுட்பம் மற்றும் புதிய இலத்திரனியல் உபகரணங்கள்**

**London Language School**

"School with golden touch"

யாழ். மண்ணில் ஆங்கிலக் கல்வியில் தனக்கென ஒரு தனிமுத்திரையைப் பதித்துக்கொண்ட LLS இன் ஆங்கிலக் கற்கைநெறிகள்

# English for Communication
# Foundation English for A/L
(2006, 2007 A/L examinations)
# A/L General English Exam. Coaching and Paper Classes
(2005 April Examination)

"Classes by Qualified Professionals Associated with Foreign Tutors"

FREE Seminar & Consultation

22nd & 23rd (Sat. & Sun.) 9 a.m. - 4p.m.

Contact: London Language School, 774 Hospital Road, Jaffna. 0777 222300, 0777 238605, 0776 176383

PACIFIC NET

"THE TECHNOLOGY EDUCATION"

நவீன தொழில்நுட்ப உலகில் உங்கள் கணனி அறிவை வளர்த்துக்கொள்ள அரிய தொரு சந்தர்ப்பம்

எமது கற்கைநெறிகள்:

- Diploma in Software Engineering
- Diploma in MS Office
- Diploma in Multimedia
- Diploma in Hardware Engineering
- Desk Top Publishing
- Computerized Accounting
- KIDS Computer Garden

→ Associated with Foreigan Qualifed Proffessionals
→ Unlimited Practical Hours

**PACIFIC NET - TECHNOLOGY EDUCATION**

No. 01, Brown Road, Jaffna.
*Contact:* 0777 763781, 0776 176383

NIKAI — BLACK&DECKER Power Tools and Home Appliances

நேரடியாக Japan நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட NIKAI தரமான உற்பத்திகள்

VCDs, DVDs, Washing Machines — 1 Year Warranty

Television 14', 21', 21 Flatrone — 5 Years Warranty

Black & Decker Products from England

| வலுச்சக்தி உபகரணங்கள் | வீட்டுப் பாவனைப் பொருள்கள் |
|---|---|
| DRILLERS | Rice Cooker |
| ANGLE GRINDERS | Gas Cooker |
| ROUTERS | Blenders / Mixers |
| PLANERS | Micro wave Ovens |
| 6 Months Warranty | 1 Year Warranty |

BLACK&DECKER — NIKAI — DELTRONIC

SEASONAL SHOW AND SALES
22nd & 23rd @ London Language School

Contact PACIFIC NET, #01, Brown Road, Jaffna, Sri Lanka.

PACIFIC NET COMPUTERS

"யாழ்ப்பாணத்தில் அனைத்துவிதமான - தரமான கணனி, கணனி உபகரணங்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்"

# Branded, Unbranded Computers
# PI, P II, P III, PIV Computers.
(DELL, SAMSUNG, AOpen, COMPAQ)
# Computer Repairs & Services
# Educational & Entertainment CDs, DVDs
# Maintenance, Net working and Software Installations

"FIRST COME FIRST SERVED"

SEASONAL SHOW & SALE @ London Language School

*Contact: Pacific Net Computers*

# 01, Brown Road, Jaffna, Sri Lanka.
Tel.: 021 222 6413
Hot Line: 0777 763781
E-Mail: iso@sltnet.lk / easan@ front.ru

22ஆம், 23ஆம் திகதி சனி, ஞாயிறு இரு தினங்களும் இலவசக் கருத்தரங்குகளும் பல்வேறுவகையான கணனி, இலத்திரனியல் உபகரணங்களின் @ விற்பனையும். நேரம் 10 a.m. - 5 p.m.

**LONDON LANGUAGE SCHOOL**

774, HOSPITAL ROAD, JAFFNA. (41123)(24-45-26)

# உணவுடனான வேலைத்திட்டத்தில் முறைகேடு இடம்பெற இடமளியாதீர்!

## கிளிநொச்சி அரச அதிபர் வலியுறுத்து

பரந்தன்,ஜன.21

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள உணவுடனான வேலைத் திட டத்தின் கீழ் பணியாற்றியவர்களுக்கான பொருள களை வேறு நபர்கள் பெற்றுக்கொள்ள இடம ளிக்கக் கூடாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் ததாவது:-

கடந்த ஆண்டு கிராமங்கள் தோறும் நடை முறைப்படுத்தப்பட்ட உணவுடனான வேலைத் திட்டத்தின் கீழ் பணியாற்றியவர்களுக்கான பொருள்கள் வழங்கப்பட்டமை தொடர்பாகக் கிளி நொச்சி மாவட்ட செயலகத்துக்கு பல முறைப் பாடுகள் கிடைத்துள்ளன. எனவே இது விட யத்தில் அந்தந்தப் பிரதேச செயலர்கள் கூடிய கவனமெடுத்து செயற்பட வேண்டும்.

பொருள்களை விநியோகம் செய்யும் போது உரியவர்கள் அவற்றைப் பெறுகின்றார்களா என்பதை உறுதி செய்ய குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றைப் பரிசீலனை செய்தே அவற்றை வழங்க வேண் டும் - என்றார். (8-203-352)

## இளைஞர் கழகங்கள் பதிவினைப் புதுப்பிக்க கோரிக்கை

முல்லைத்தீவு,ஜன.21

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து இளைஞர் கழகங்களையும் தமது பதிவினைப் புதுப்பிக்குமாறு மாவட்ட இளை ஞர் சேவை அதிகாரி சி.சண்முகவடிவேல் கேட டுள்ளார்.

இளைஞர் கழகங்கள் நிர்வாகிகளைப் புதி தாகத் தெரிவு செய்து தமது பதிவினைப் புனர மைப்புச் செய்வதுடன் அறிக்கைகளை எதிர் வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டக் காரியாலயத்தில் ஒப்படைத்து பதிவினை மேற் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள் ளார். (202)

## முல்லை சுகாதாரப் பணிமனையை மீண்டும் இயக்குவதற்கு முயற்சி

ஒட்டுசுட்டான்,ஜன.21

சுனாமி பேரலையால் அழிவுற்ற முல்லைத் தீவு மாவட்ட சுகாதாரப் பணிமனையை மீண் டும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகப் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது:-

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரால் பணி மனைக்கான கூடாரங்கள் அமைக்கப்பட்டு வரு கின்றன. தற்காலிகமாக நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் வகையில் 60 கட்டில்கள் போடக் கூடிய வசதிகளுடன் விடுதிகளும் அமைக்கப் படவுள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தினால் மின்பிறப்பாக்கி உட்பட சில அத்தியாவசிய உபகரணங்களும் பணிமனைக்கு வழங்கப்படவுள்ளன - என்றார். (8-341-202)



கிளிநொச்சி ஜெயபுரம் அ.த.க. பாடசாலையின் 15 ஆம் ஆண்டு விழா அண்மையில் நடை பெற்றது. இவ்விழாவிற்கு வருகைதந்த கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரிய ரத்தினம், பூநகரிக் கோட்டக்கல்வி அதிகாரி தி.கணபதிப்பிள்ளை, பூநகரி வெகுஜன அமைப புக்களின் ஒன்றியத்தலைவர் பொ.தங்கராசா ஆகியோர் பாடசாலை அதிபர் திருமதி வி.ரதிதேவியினால் அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:ஜெயபுரம் செய்தியாளர்)

## முல்லைத்தீவு வைத்தியசாலை மீண்டும் பழைய இடத்தில்

ஒட்டுசுட்டான்,ஜன.21

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை கடந்த முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் பழைய இடத்தில் தனது பணியினை ஆரம்பித் துள்ளது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் தனது பணிகளை ஆரம்பித்து மாதாந்தச் சிகிச்சை கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விசேட சிகிச் சைகள் என்பனவற்றை வழங்குகிவருகின்றது.

சுனாமி அனர்த்தத்தினால் தமது மூக்குக் கண்ணாடிகளை இழந்த முல்லைத்தீவுப் பகுதி யைச் சேர்ந்தவர்களுக்கான விசேட சிகிக்சை களும் இங்கு நடைபெற்று வருகின்றன. (8-203-341)




## புனர்வாழ்வுக்கிளையின் பணிகள் மந்தகதியிலே நடைபெறுகின்றன

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தி லுள்ள கிளையினால் நடைமுறைப்படுத்தப்ப டும் வேலைகள் மந்தகதியில் நடைபெறுவதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராச நாயகம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அத்தியாவசியக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது:-

மந்தகதியில் நடைபெறும் இந்த வேலை களைத்துரிதப்படுத்த அனைவரும் முன்னின்று உழைக்க வேண்டும். அரச செயலக புனர்வாழ் வுக்கிளையினால் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் அனைத்து வேலைகளும் துரித கதியில் நடைபெற வேண்டும் - என்றார். (8-352-202)

## கேணல் கிட்டு நினைவு தினம் ஒட்டுசுட்டானில் நடைபெற்றது

ஒட்டுசுட்டான்,ஜன.21

வங்கக்கடலில் காவியமான கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12 ஆம் ஆண்டு நினைவு நாள் கடந்த 16 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிர தேசத்தில் கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கல வன் பாடசாலையில் உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டது.

கற்சிலைமடு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினைக் கற்சிலை மடு பாடசாலைத் துணை முதல்வர் திருமதி செல்வமலர் சிவனேசனும், தமிழீழத் தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கேணல்கிட்டுவின் திருவுருவப் படத்திற்கான சுடரினை கனகபுரம் கிராம சேவை யாளர் ஏற்றிவைக்க மலர்மாலையினை இடது கரைப்பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலா ளர் கந்தசாமி அணிவித்தார்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.வன்னியசிங்கம், ஒட்டுசுட்டான் கோட்டப் பொறுப்பாளர் ஈழவன், கிராம சேவை யாளர் மு.சிவனேசன் ஆகியோர் நினைவுரை களை நிகழ்த்தினர். (8-203-341)

## பூநகரி வைத்தியசாலைக்கு புதிய வைத்தியர் நியமனம்

வேரவில்,ஜன.21

பூநகரி சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ்.சுதர் சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் தனது கடமையைப் பொறுப்பேற்று சேவை யாற்றி வருகின்றார். (8-323-203)

## வைத்திய உதவியை வழங்கியோருக்கு நன்றி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.21

சுனாமி அனர்த்த நெருக்கடியின் போது வைத் திய உதவிகளை வழங்கிய அனைவருக்கும் கிளிநொச்சி மருத்துவ சங்கம் நன்றி தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:-

சுனாமி பேரலையால் காயமடைந்து கிளி நொச்சி வைத்தியசாலையில் நோயாளர்கள் பெரு மளவில் வந்தபோது தேவை கருதி மருத்துவ நிபுணர் குழுவுடன் வருகை தந்த யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரும் சத்திர சிகிச்சை நிபுணருமான டாக்டர் ந.இரவிராஜ் மற்றும் சிகிச்சைகளை மேற்கொண்ட அனைத்து வைத்திய நிபுணர்களுக்கும், தாதிய உத்தியோ கத்தர்கள் மருத்துவ பீட மாணவர்கள், தாதிய மாணவர்கள் அனைவருக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் சங்கம் தனது நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றது-என்றுள்ளது. (த-305-202)

## குழாய் பொருத்துநரில் முதல் நிலையில் உள்ள பத்துப்பேர் பணப்பரிசில் வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

குடாநாட்டில் இயங்கிவரும் 'எஸ்லோன்' நிறு வனத்தில் குழாய் பொருந்துநரில் முதல் நிலை யில் உள்ள பத்துப் பேர் நேற்றுமுன்தினம் கௌர விக்கப்பட்டனர்.

வரையறுக்கப்பட்ட 'எஸ்லோன்' லங்கா நிறு வனத்தின் யாழ்.மாவட்டத்திற்குரிய விற்பனை நிலையக் களஞ்சியத்தில் 'எஸ்லோன்' லங்கா நிறுவனத்தின் பொருள் அபிவிருத்தி முகாமை யாளர் ப.மகாதேவன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் 'எஸ்லோன்' லங்கா நிறுவனத்தின தேசிய தொழில் பயிலுநர்களுக்கான பயிற்சி வழங்கும் அதிகார சபையில் இணைந்து பயிற்சி பெற்று சங்கத்தின் உரிமை பெற்றவர்களில் யாழ். மாவட்டத்தில் முதல் நிலையில் தொழிற்பட்டு வரும் பத்துப் பேருக்குப் பணப் பரிசில்கள் வழங் கப்பட்டன.

பணப்பரிசுகள் பெற்ற பத்துப் பேரின் பெயர் விவரம் வருமாறு:

பருத்தித்துறையைச் சேர்ந்த கே.ராஜ்குமார் முதலாமிடத்தைப் பெற்று பத்தாயிரம் ரூபாவும் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான எம்.தேவ ராசா இரண்டாமிடத்தைப் பெற்று ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவும், ரீ.பகீதரன் மூன்றாமிடத்தை பெற்று ஐயாயிரம் ரூபாவும் பெற்றனர்.

ரீ.சாந்தகுமார் (திருநெல்வேலி), எம்.இந்திர சேகரா (யாழ்ப்பாணம்), ரீ.தர்மசீலன் (யாழ்ப்பாணம்) சீ.பொன்சிவரஞ்சன் (பொலிகண்டி), ஏ.விமலன் (கோப்பாய்), எம்.ரொனி ரொமனன் (பருத்தித்துறை), என்.நவநேசன் (இணுவில்) ஆகியோர் முறையே தலா ஆயிரம் ரூபா பணப் பரிசினைப் பெற்றனர்.

இப்பணப்பரிசுகளை 'எஸ்லோன்' லங்கா நிறு வனத்தைச் சேர்ந்த அன்ரனிராஜ், பிரணவன், செல்ரன், ஜோசப் ரொபின், ஜோன்சன், மகாதேவன் ஆகியோர் வழங்கிக்கௌரவித்தனர். (எ-ரி)





'எஸ்லோன் லங்கா' நிறுவனத்தின் யாழ்.முகவர் நிலையத்தில் நேற்றுமுன்தினம் எஸ்லோன் குழாய் பொருந்துநரில் முதல்நிலையில் உள்ளோருக்குப் பரிசளிப்பு நிகழ்வொன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 'எஸ்லோன் லங்கா' நிறுவனத்தின் பொருள் அபிவிருத்தி முகாமையாளர் ப.மகாதேவன் முதலிடம் பெற்ற கே.ராஜ் குமாருக்குப் பத்தாயிரம் ரூபா பணப்பரிசை வழங்குவதை முதலாவது படத்திலும் -

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மேலும் சில உறுப்பினர்கள், பணியாளர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: பார்த்தீபன்)

## 'சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

எம்மிடம் Bajaj 147 Two Light Blue நிற தனிப்பெற்றோல் பாவனையிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சி.கிருஷ்ணபிள்ளை, ஜோதி சனசமூக நிலைய வீதி, இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி. T.P.: 226 3045. (சி-40537)

### காணி தேவை

ஆங்கிலப் பாடசாலை ஒன்று அமைப்ப தற்கு மானிப்பாய்ப் பகுதியில் ஒரு ஏக்கர் காணி உடன் தேவை. தொடர்பு: Mr.குலநாயகம், T.P.: 0777 238300 (41101)

### மணமக்கள் தேவை

இந்து அழகான, இளம் தோற்றமுடைய, 39 வயது, சிறந்த சீதனமுடைய மணமகளுக்கும் (ஒரேமகள்), இங்கிலாந்துப் பிரஜாவுரிமை உள்ள 36 வயதுடைய, இங்கிலாந்தில் படித்த, நிதிமுகாமைத்துவ பட்டதாரி மணமகனுக்கும் மணமக்கள் தேவை. மாற்றுக் கல்யாணமும் ஏற்புடையது. தொடர்பு: C/o: விளம்பர இல. 2478, உதயன். (41096)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயது, சதய நட்சத்திரம், முதலாம் பாதம் - (கும்பராசி), நோர்வே பிரஜாவுரிமையுடைய (தற்போது இலங்கை வந்துள்ளார்) நிரந்தர தொழில்புரியும் நற்பண்புள்ள மணமகனுக்குத் தாயார் பொருத்தமான, படித்த, நற்குணமுடைய மணமகளைத் தேடுகின்றார். சீதனம் தேவையில்லை. தொடர்பு: விளம்பர இல. 2479, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

(41124)

## மாதகலில் 8 குடும்பங்களுக்கு விசேட உலர்உணவு

வலி.தென்மேற்கு,ஜன.21

சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தின்போது மாதகல் கடற்கரைக்குச் சமீபமாக விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்ட எட்டு குடும்பங்களுக்கு பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதகல் கிளை மூலம் விசேட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கடற்பேரலைகள் இவர்களின் விவசாய காணிகளுக்குள் புகுந்ததால் வெங்காயப்பயிர்கள், நெற்பயிர்கள் என்பன பாதிக்கப்பட்டிருந்தன. (எ-135)

## பரிசாரகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஜன.21

யாழ். சுகாதார திணைக்களம் யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நிலவும் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போது வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் சாதாரண தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியிலிருந்து பரிசாரகர் பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்து அவர்களுககு மூன்று மாதகால பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பரிசாரகர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்துள்ள சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் இப்பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(எ-135)

## ஆழிப்பேரலை பாதித்தோருக்கு சுழிபுரம் பிரதேச சபையும் உதவி

வலி.தென்மேற்கு,ஜன.21

சுனாமி கடற்கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வலிகாமம் மேற்கு (சுழிபுரம்) பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருள்கள் கரவெட்டிப் பிரதேச செயலரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

குழந்தைப் பிள்ளைகளுக்கான பால்மா, நுளம்பு வலைகள், நுளம்புத் திரிகள், சவர்க்காரங்கள், உணவு மற்றும் தேனீர் அருந்துவதற்கான பாத்திரங்கள், கோப்பைகள் ஆகியன உட்பட மற்றும் பல பொருள்கள் பிரதேச சபையினரால் கையளிக்கப்பட்டுள்ளன. (எ-135)

# சர்வதேச நாடுகளை ஏமாற்றும் வகையிலேயே அரசின் நிவாரணப் பணிகள் அமைந்துள்ளன

## குற்றஞ்சாட்டுகிறார் தளபதி கேணல் பானு



மட்டக்களப்பு,ஜன.21

சர்வதேச நாடுகளை ஏமாற்றும் வகையில் அரசின் நிவாரணப்பணி நடவடிக்கைகள் அமைந்துள்ளன. பாதிக்கப்பட்ட வடக்கு - கிழகக்கு மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன என்ற அறிவிப்பு மட்டுமே அரசிடமிருந்து வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் பானு.

இது தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியானது.

மிகுதி வருமாறு:-

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன் புரி நிலையங்களில் முழு ஆயுத பாணிகளாக தேவையற்றவிதத்தில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது நிவாரண மற்றும் மீட்புப் பணிகளில் பாதிப்பை ஏற படுத்துகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், தனியார் வர்த்தகர்களும், அரச சார்பற்ற நிறுவனத்தினரும் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், பொது அமைப்புகளின் ஒன்றியமும் பல லொறிகளில் உதவிப்பொருள்களை அனுப்பிவைத்திருந்தன.

அரசு உதவிகளை வழங்குகின்றது என்று வெளியே சொல்லிக்கொண்டிருக்கின்றதே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவை கிடைக்கவில்லை. அரசின் நடவடிக்கைகளால் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள்கூட தமது கடமையைச் சரிவர ஆற்றமுடியவில்லை.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு விசேட அதிரடிப் படையினரால் தடங்கல்கள் ஏற்படுத்தப்படுவது குறித்து எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கழகப் பணியாளர்கள் நிம்மதியாகப் பணியாற்ற முடியவில்லை. அவர்களின் நிவாரணப் பொருள் களஞ்சியங்களை அகற்றுமாறு அதிரடிப் படை நிர்ப்பந்திக்கிறது. பயன்படுத்தப்படாதிருந்த கட்டடங்களில் களஞ்சியங்கள் இருந்தால்கூட இராணுவம் அவற்றை அகற்றுமாறு அச்சுறுத்துகின்றது.

*கேள்வி:* தெற்கில் அவசர நிவாரணப் பணிகளின் அடுத்த கட்டமாக மீள்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கில் நிலைமை எப்படி இருக்கின்றது?

*பதில்:* இங்கு அவசர மனிதாபிமானப் பணிகளே இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. போக்குவரத்துக்கூட சரியாகச் சீர்செய்யப்படவில்லை. மட்டக்களப்பு - அம்பாறை போக்குவரத்து 20 நாள்களாகியும் வழமைக்குத் திரும்பவில்லை.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியநிலை இருக்கிறது. அதற்கு, முதலில் பாடசாலைகளில் இருக்கும் மக்களை தற்காலிகமாகக் குடியிருப்புக்களுக்கு மாற்றவேண்டும். அதற்கான போதிய கூடாரங்கள் இன்னும் இங்கு வந்து சேரவில்லை.

மட்டக்களப்பு அரச அதிபர் இங்குள்ள தேவைகள் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். கூடாரங்கள், மின்பிறப்பாக்கிகள், கனரக வாகனங்கள் என்பன தேவை என அவர் கேட்டிருந்தார். ஆனால், அவர் கேட்ட அளவுக்குப் பொருள்கள் வந்துசேரவில்லை என்றே நாம் அறிகின்றோம். வரும் உதவிகள் மக்களுககுப் போதியனவாக இல்லை.

வெளிநாடுகளிலிருந்து உதவிகள் வந்து குவிகின்றன. அவை தெற்கேயே போய்ச் சேர்கின்றன போன்று தெரிகிறது. தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு எவையும் வரவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களே இங்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. அரசின் சி.என்.ஓ. எனப்படும் அமைப்பே வெளிநாடுகளிலிருந்துவரும் உதவிகளை ஒருங்கிணைக்கின்றது. அந்த அமைப்பு மூலம் எமது மக்களுக்கு உதவிகள் வந்துசேரவில்லை.

மக்களை தற்காலிகக் குடியிருப்புக்களில் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளையே முழுமையாகச் செய்யாத நிலையில் மீள்கட்டுமானம் பற்றி இங்கு சிந்திக்க முடியாது.

மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் சுனாமிப் பேரலையால் இடிந்த கட்டடங்களின் இடிபாடுகளே இன்னும் அகற்றி முடிந்தபாடாக இல்லை. சடலங்கள்கூட மீட்கப்பட்டு வருகின்றன. இடிபாடுகளை அகற்றுவதற்கான கனரக வாகனங்கள் தேவை. அவை இங்கு இல்லை. முதலில் இவற்றைச் சரிவரச் செய்வதற்கு வழி ஏற்படுத்தப்படவேண்டும்.

மட்டு. - அம்பாறை மக்கள் சுனாமியால் மட்டும் பாதிக்கப்படவில்லை. அதற்கு முன்னர் இங்கு ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளார்கள். அதிலிருந்து மீண்டு வருவதற்குள் சுனாமி அவர்களைத் தாக்கியது. பின்னர் மீண்டும் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இதனால் பெரும் அவல நிலைக்குள் சிக்கியுள்ளார்கள் எமது மக்கள் - என்றார். (க-8)

## திருவிழாத் திருப்பலி

யாழ்ப்பாணம்,ஜன.21

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறும்.

(ஐ-202)

## நீர் விநியோகம் குறித்து மாநகரசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

அரியாலை சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் உள்ள மக்கள் அப்பகுதியில் குழாய் வழியாகவரும் நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்த வேண்டாம் என மாநகரசபையின் நீர் விநியோகப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

அப்பகுதியில் நீர் விநியோகம் செய்யப்படும் குழாய்களில் திருத்த வேலைகள் செய்யப்படுவதாகவும் -

அதனால், அப்பகுதிகளில் குழாய் வழியாக வரும் நீரைத் தமது அறிவித்தல் வரும்வரை குடிப்பதற்குப் பயன்படுததவேண்டாம் என்றும் மாநகர சபையினர் அறிவித்துள்ளனர்.

(எ-203)

### விற்பனையாகின்றது

(வடலியூர்
கே.அருள் தவராஜ்ஜின்)
மார்கழி தீஞ்சொட்டு
Palmerah Poem Anthology
கிடைக்கும் இடம்:
* ஸ்ரீலங்கா புத்தகசாலை
* பூபாலசிங்கம் புத்தகசாலை
* மக்மிலன் புத்தகசாலை (41115)

### நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| குருநாதர் சுப்பிரமணியம் | | சுப்பிரமணியம் பராசக்தி |
| தோற்றம் | 1934-07-12 | 1942-07-10 |
| மறைவு | 1994-01-14 | 2004-02-02 |
| திதி: சதுர்த்தி | | ஏகாதசி |
| 2005-01-14 | | 2005-01-21 |

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம்
உள்ளத்தை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
முதலாம் வட்டாரம்
வசாவிளான். (41113)(26-19-16)

- குடும்பத்தினர்,
சீலைன்ஸ் கொம்ப்பிளெக்ஸ்,
வதிரி வீதி, உடுப்பிட்டி.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### மருத்துவ பீடம்
### புகுமுக மாணவர்களைத் துன்புறுத்தல்

புதிய மாணவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் அம்மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாகத் தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இத்தகைய துன்புறுத்தல்களை எக்காரணம் கொண்டும் எம்மால் அனுமதிக்கமுடியாதென்பதுடன் இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை அவர்களின் பெயர், மாணவர் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் எமக்குத் தெரியப்படுத்தினால், தற்போது நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக விதிகளின்படி பல்கலைக்கழக கல்வியிலிருந்து அவர்கள் விலக்கப்படுவார்கள்.

பீடாதிபதி/மருத்துவ பீடம்.
19-01-2005 (சி-40549)(26-11-16)

### மரண அறிவித்தல்

#### திருமதி நடராஜா இராசம்மா

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா இராசம்மா நேற்று (20.01.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகசபை தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி (லண்டன்), இராஜலிங்கம் (பெரியதம்பி - கொழும்பு), மகாதேவன் (குஞ்சு - கொழும்பு), பரமேஸ்வரி (கமலா - திருகோணமலை), சற்குணேஸ்வரி (குணா), நிர்மலேஸ்வரி (ராசாத்தி - ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பத்மநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வவநாதன், இந்திராணி, இராஜேந்திரா, யோகேஸ்வரி, பாலச்சந்திரன், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். (41120)(26-19-16) மக்கள், மருக்கள்.


### யாழ்ப்பாணத்தில் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் பயிற்சிக் கல்லூரி
### M.M.C.C

2005 புதுவருடத்தை முன்னிட்டு பயிற்சி நெறிகளுக்கு கட்டணக் குறைப்பு
50% சிறப்புக் கழிவு
தபால் மூல டிப்ளோமா பயிற்சிநெறி 4 மாதங்கள்
ஒலிபரப்பாளர் நேரடிப் பயிற்சி வகுப்பு 3 மாதங்கள்
இக்கட்டணச் சலுகை ஜனவரி 31 மட்டுமே!
3மாத நேரடிப் பயிற்சி வகுப்பு.
பிரிவு II ஜனவரி 22ஆம் திகதி
பிரிவு III ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

*அறிவிப்பு *நிகழ்ச்சி தயாரித்தல்
*செய்தி வாசிப்பு
*கலையக நிர்வாகம்
*நேர்முக வர்ணனைகள்
*மேடை நிகழ்ச்சித் தொகுப்பு

அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் இணைவதற்கு இப்பயிற்சிநெறி பெரும்வழியாக அமையும்.

தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
T.P.: 0776 910612

Jan. 22 பிரிவு II ஆரம்பம்

M.M.C.C.
328, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம் (ஆரியகுளம் சந்தி)
(41117)(26-19-16)

# நாட்டை மீளக் கட்டியெழுப்புவோம் என்ற அரசின் உறுதிமொழி வெறும் பம்மாத்து!

## ஜே.வி.பி. அமைச்சர் கடுமையான சாடல்

கொழும்பு,ஜன.21

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட எமது நாட்டை இந்த அரசு மீளக்கட்டியெழுப்பும் என்பது வெறும் பம்மாத்து. அரசியல் பேதங்களை மறந்து செயலாற்றுவோம் எனறு அரச தரப்பு அழைப்பு விடுப்பதும் ஓர் ஏமாற்று வித்தை.

இப்படி அரசை சாடுகிறார் சிறுகிராமிய கைத்தொழில் அமைச்சரும், ஜே.வி.பியின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதான அமைப்பாளருமான லால்காந்த.

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வைபவம் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. அந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் லால்காந்த மேறகண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வெறுமனே வார்த்தை ஜாலங்களால் ஆட்சி நடத்த அரசு முயல்கிறது.

அரச வானொலியும், தொலைக்காட்சியும், அதன் அச்சு ஊடகமும் வெறும் கற்பனையில் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் அரசின் அமைச்சர் அல்லது அதிகாரி என அரசுக்குச் சார்பானவர்கள் கூறுவதைச் சித்திரித்துக்கொண்டு இருக்கின்றன அவை. அவற்றில் கூறப்படுவதுபோல எதுவும் நடைபெறுவதில்லை.

அரசும் அதனுடன் இணைந்திருக்கும் நாமும் இணைந்து சேவையாற்றினாலும் கூட எம்மால் நாட்டை முழுமையாகக் கட்டியெழுபப முடியாது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடன் இணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பப் போகிறோம் என்றும் கூறப்படுகிறது. இது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

இந்த மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருமுகத்துடன் செயற்படத் தயார் எனக் கூறுகிறார்கள், ஊடகங்களிலும் செய்தி வெளியிடுகிறார்கள். ஆனால், இதுவரையில் யாருமே நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுசேரவில்லை. தெல்வத்தையில் முற்றாகச் சேதமுற்ற ரயில் பாலத்தை உடனடியாக மீள அமைப்பதற்கு அதற்குரிய அமைச்சருக்குக்கூட முடியாமல் போகவே அவரும் அம்முயற்சியிலிருந்த ஒதுங்கி விட்டார். ஆனால், ரயில்வே ஊழியர் சங்கம் தானாகவே முன்வந்து தனது தொண்டர்களைப் பணிக்கு அமர்த்தி 24 மணித்தியாலத்தில் அந்தப் பாலத்தைக் கட்டிமுடித்தது.

இதுபோன்றுதான் நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும்.

வெறுமனே ஊடகங்கள் மூலம் இந்த அமைச்சர்கள் வாய்ச்சவடால் அடிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல தொண்டர் நிறுவனங்கள் தாமாக முன்வந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன.

அரசின் அமைச்சர்கள் குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இருந்துகொண்டு அறிக்கை விடுகிறார்கள். அரசுடன் இணைந்து செயற்படுகிறோம் என்று கூறும் அரசியல்வாதிகள் இறுதியில் எங்கேயோ இருக்கும் குப்பைக் குழிகளை மீண்டும் கிளறுகிறார்கள்.

பிரதான அரசியல் கட்சிகள் மூன்றும் ஒரு போதும் இணையும் சாத்தியமே கிடையாது. அப்படியொருநிலை உருவானால் அது உலக சரித்திரம். அப்படி ஒன்று சேர்ந்தாலும் கூட நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது - என்றார் அவர். (எ-க)

# ஆழிப்பேரலை அள்ளிய ரயிலில் பயணித்தோரில் 590 பேருக்கு மரணச் சான்றிதழ்.

கொழும்பு,ஜன.21

தென்பகுதியில் ரயிலில் பயணித்த சமயம் ஆழிப்பேரலையில் அள்ளிச் செல்லப்பட்டு உயிரிழந்த 590 பேருக்கும் நேற்றுமுன்தினம் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி கடந்த மாதம் 26 ஆம் திகதி பயணித்துக் கொண்டிருந்த ரயில் மீட்டியகொட என்ற இடத்தில் வைத்து ஆழிப்பேரலையில் அள்ளி அடித்துச் செல்லப்பட்டது. அச்சமயம் அந்த ரயிலில் பயணித்துக் கொண்டிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளும் நீரில் அள்ளுண்டனர். இதில் பல நூற்றுக்கணக்கானோர் மாண்டனர்.

இந்த அனர்த்தத்தில் சிக்கி மரணமான பல நூற்றுக் கணக்கானவர்கள் பற்றிய சரியான விவரங்கள் இதுவரை கிடைக்காதபோதிலும் உரிய விவரங்கள் கிடைக்கப்பெற்ற 590 பேருக்கு மட்டும் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதே ரயிலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் பயணம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)



இம்மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் ஆசிய ஜேர்மன் நாடுகளின் விளையாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் தலைவர் டைற்மன் டொறிங் ஆகியோர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென மருந்து மற்றும் உதவிப் பொருள்களைத் தொண்டு நிறுவனங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் வழங்கினர்.

யாழ். றோட்டறக்ட் கழகத்துக்கென அவர்கள் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களைக் கழகத்தின் பொருளாளர் றோட்டேரியன் திருமதி என்.தர்மகுலசிங்கத்திடம் கையளப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# நிவாரணப் பணியாளர்களுக்கு வந்த தொலைத்தொடர்புக் கருவிகளுக்குத் தடை

கொழும்பு,ஜன.21

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொண்டர் நிறுவனமொன்றுக்குக் கொண்டுவரப்பட்ட தொலைத்தொடர்புக் கருவிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 18ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த விமானமொன்றிலேயே இந்தத் தொலைத்தொடர்புக் கருவிகள் அடங்கிய பொதி எடுத்துவரப்பட்டது. அப்பொதியைப் பரிசோதனைக்கு உட்படுத்திய சுங்க அதிகாரிகள் அதிநவீன தொலைத்தொடர்புக் கருவிகள் 14 அதில் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

விமான நிலையக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து அந்தக் கருவிகள் இலங்கையில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொண்டர் அமைப்பு ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்தது. எனினும், அவை உரிய தொண்டர் நிறுவனத்திடம் கையளிக்கப்படவில்லை.

மீட்புப் பணிகளில் ஈடுபடுவர்களுக்குத் தொலைத்தொடர்புக் கருவிகள் அத்தியாவசியமானவை என இலங்கைக்கு அண்மையில் விஜயம செய்த இன்டர்போல் (சர்வதேச பொலீஸ்) அமைப்பின் இயக்குநர் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசின் உத்தரவுக்கு அமையவே தொண்டர் நிறுவனங்களுக்கு வரும் பொதிகள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

# வடமராட்சி ஆஸ்பத்திரிகளுக்கு வழங்க மருந்துகள் தொடர்ந்தும் கிடைக்கின்றன

## சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

வலி.தென்மேற்கு,ஜன.21

சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கென யாழ். சுகாதாரத்திணைக்களத்திற்குத் தொடர்ந்தும் மருந்து வகைகள் கிடைத்து வருகின்றன.

கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் மருந்து விநியோகப்பிரிவு, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்கள் இந்த மருந்து வகைகளை யாழ். சுகாதாரத் திணைகளத்திற்கு ஏற்கனவே வழங்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் இந்த மருந்துகள் தேவைக்கேற்ப அனுப்பிவைக்கப்பட்டு வருவதாக யாழ். சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - சில உதவி வழங்கும் நிறுவனங்களால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென அனுப்பி வைக்கப்பட்ட மருந்து வகைகளில் சில மருந்துகள் திகதி காலாவதியானவையாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. இதனைப் பாவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதேசமயம் - இலங்கையில் பாவனையில் இல்லாத புதிய மருந்து வகைகளும் இங்கு கிடைத்துள்ளன என்றும் - பிரயோசனமில்லாத மருந்து வகைகளும் இவற்றில் அடங்கும் எனறும் -

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மருந்துவகைகளையே இங்கு பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும் - சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள முக்கிய அரச வைத்தியசாலையான பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தற்போது தேவையான மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

ஏனைய, அரச வைத்தியசாலைகளுக்கும் தேவைக்கேற்ற முறையில் யாழ். சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியம் மருந்து வகைகளை விநியோகித்து வருகின்றன. (எ-135)



மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலயத்துக்கென அண்மையில் கஜமுகாசூரன் வாகனம் வடிவமைக்கப்பட்டது. திருநெல்வேலி திர்ஷிகா கலைக்கூடத்தினர் இதனை வடிவமைத்திருந்தனர். கஜமுகாசூரனின் கையளிப்பு நிகழ்வில் சிற்பகலாவாரிதி விஸ்வப்பிரம்மஸ்ரீ ந.சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார் மற்றும் ஆலயப் பிரதமகுரு வாகனத்தை வடிவமைக்க நிதியுதவி வழங்கியோர் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

# போலந்துப் பிரதமர் வருகை

கொழும்பு,ஜன.21

போலந்துப் பிரதமர் மோர்க் பெல்க்கர் நேற்றுமுன்தினம் இலங்கை வந்துசேர்ந்தார். தமது நாட்டு விமானப்படை விமானத்திலேயே அவர் வருகைதந்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டைப் பகுதிக்குச் செல்லும் அவர், வீரவிலபகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்தார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)

# தங்க நகைகள் கண்டெடுப்பு

வடமராட்சி,ஜன.21

மணற்காட்டில் உள்ள குடியிருப்புப் பகுதி முற்றத்திலிருந்து 10பவுண் நிறைகொண்ட இரு தங்கநகைகள் துப்புரவுப் பணியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணியின் ஏற்பாட்டில் மணற்காட்டுக் கிராமத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரி பிரதேச சபைத் தொழிலாளர்கள் இத தங்க நகைகளைக் கண்டெடுத்தனர்.

கண்டெடுக்கப்பட்ட தங்கநகைகளை மணறகாடு பங்குத்தந்தையிடம் ஒப்படைத்துள்ளனர். (10-173)

# கீரிமலை புனித தீர்த்தக்கரையில் மீண்டும் பிதிர்க்கடன் நிறைவேற்றும் பணி

வலி.தெற்கு.ஜன.21

ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக கீரிமலை மடத்தில் தடைப்பட்டிருந்த பிதிர்க்கடன் நிறைவேற்றும் கிரியைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சுனாமியில் அசுத்தமடைந்திருந்த கீரிமலைக் கேணி மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு துபபுரவு செய்யப்பட்டுள்ளது.

கீரிமலைக் கேணியை முற்றாக இறைத்துத் துப்புரவு செய்யும் பணியினை கடற்படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கடந்த வாரம் மேற்கொண்டனர்.

ஆழிப்பேரலை காரணமாகக் கீரிமலைப் பிதிர்க்கடன் மடத்துக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை. மடம் துப்புரவு செய்யப்பட்டுப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அதேவேளை, கீரிமலைக்குப் பிதிர்க்கடன் நிறைவேற்றச் செல்பவர்களுக்காக இதுவரை தடைமுகாமில் விதிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் எந்தவித பயமும் இன்றி மீண்டும் கீரிமலையில் பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என மடத்தின் பொறுப்பாளர் கா.சந்திரசேகரசர்மா அறிவித்துள்ளார். (எ-152)

## இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல் 2004.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து, கீழ்க்குறிப்பிட்டுள்ள விருதுகளை வழங்குவதற்காக, 2004 ம் ஆண்டில் எழுத்து ஊடகத் துறையில் செயலாற்றியவர்களிடமிருந்து விண்ணப்ப பதிவுகளைக் கோர விரும்புகிறது.

ஆண்டு தோறும் நிகழும் இவ்விருது வழங்கலின் பிரதான நோக்கமானது, குறிப்பிட்ட ஆண்டில் மிகச் சிறப்பெய்தியவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களின் தொழிற் பண்பை அங்கீகரித்தலாகும்.

இலங்கையில் மும்மொழிகளிலும், வெளியிடப்படும் செய்தித் தாள்கள் சார்ந்த சுதந்திரமான எழுத்தாளர் உட்பட பத்திரிகையாளர்கள் இத்திட்டத்தில் பங்கு பற்றலாம்.

பத்திரிகையாசிரியர் சங்கத்தினதும், பத்திரிகை ஸ்தாபனத்தினதும் சார்பில் ஊடகங்களின் சுதந்திரமான நடுவர்கள் குழுவொன்று விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும்.

2005 ம் ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெறும் விழாவொன்றில் பின்வரும் பெருமைமிக்க விருதுகள் வழங்கப்படும்.

## விருது வகைகள்

மனுச் செய்தல் மூலம் :

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேவின் டி சில்வா விருது.
- ஆண்டின் பிரத்தியேகச் செய்தியறிக்கைக்கான (ஸ்கூப்) டி.பி.தனபாலா விருது.
- ஆண்டின் சிறந்த சுற்றாடல் அறிக்கை நிருபர் விருது.
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி நிருபருக்கான வீரசேகரி விருது.
- ஆண்டின் சிறந்த விளையாட்டறிக்கை நிரபருக்கான விருது.
- ஆண்டின் (30 வயதுக்குட்பட்ட) இளைய நிருபருக்கான டென்சில் பீரிஸ் விருது.
- ஆண்டின் சிறந்த வடிவிலமைந்த பத்திரிகை.
- விசேட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் செய்தி தொகுத்த நிருபருக்கான
- பேராசிரியர் க.கைலாசபதி விருது. ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர் - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் வர்த்தக பத்திரிகையாளர் விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறப்புக் கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த கேலிச் சித்திரகாரர் விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான (கொலமிஸ்ற்) பி.ஏ.சிறிவர்த்தன விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

### அமைப்பாளர்களின் நியமனம் மூலம் :

- தனித்திறன் பெற்றவர்களினதும் பொது மக்களினதும் பாராட்டுதலைப் பெற்றமைக்கான டி.ஆர்.விஜயரட்னா விருது.
- இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைத் தற்காத்தமைக்கான சேபால குணசேனா விருது.
- நீண்ட கால மற்றும் சிறந்த சேவைக்கான விருதுகள்.
- விருதுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அல்லது செய்தி அறிக்கைகள் பதியப்படலாம். அவ்வாறு செய்யுமிடத்து அவர்கள் யாவரினது பெயர்களும் பதியப்படல் வேண்டும்.

விண்ணப்ப பதிவுகள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 6 மணி வரை நேரில் கொடுக்கப்படலாம்.

முகவரி:
தலைவர்,
பத்திரிகையியல் விருது வழங்கல் குழு,
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், மே.'.பா
65.'.5 வாட் பிளேஸ், கொழும்பு 07.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2004 ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியிலிருந்து மார்கழி மாதம் 31ம் திகதிக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

### விண்ணப்பப் பதிவுகள் முடிவுறும் திகதி 2005-02-15

தபால் முறை: விண்ணப்பப் படிவங்களையும், விதிமுறைகள் அடங்கிய வெளியீட்டையும், கொழும்பு 07, 65.'.5 வாட் பிளேஸ், முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

Journalism Awards 2004

EXCELLENCE AWARDS 2004

## மாணவருக்கு நூல்கள் விநியோகம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒரு தொகுதி நூல்களை 'பிறைட்' புத்தக நிறுவனம் இலவசமாக வழங்கவுள்ளது.

எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான வெளியீடுகளில் ஒரு தொகுதி நூல்களையும் எழுத்தாளர், நூல் வெளியீட்டாளர் வழங்கும் நூல்களையும் பாடசாலைகள் தோறும் இலவசமாக 'பிறைட்' நிறுவனம் வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. புத்தகங்கள் தேவையான பாடசாலைகள் 'S-27, முதலாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, கொழும்பு-11' என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-202)

இன்னும் 2 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான
புலமைப்பரிசில் பரீட்சை
23-01-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
ASIAN COMPUTERS
♦ யாழ்ப்பாணம் ♦ சுன்னாகம் ♦ சாவகச்சேரி
♦ நெல்லியடி ♦ கிளிநொச்சி

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**
திதி: 21.01.2005

அன்னையின் மடியில் 19.07.1957

ஆண்டவன் அடியில் 25.01.2002

அன்பின் அண்ணாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன.
நீங்கள் இன்றி நாம் தவிக்கும்
தவிப்போ சொல்லில் அடங்காது!
உங்கள் அன்பிற்கு இவ்வுலகில்
எதுவும் ஈடிணையாகாது!

சுன்னாகம் மத்தி. (41094)(39-11-45-29) - குடும்பத்தினர்.

## முதலாவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 04 - 01 - 1933



மறைவு 02 - 02 - 2004

அமரர்
**அருணாசலம் இராசரத்தினம்**
திதி: துவாதசி 21.01.2005

ஐயா!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஓராண்டு தான் காற்றாய்ப் பறந்தது
எத்தனை ஆண்டுகள் பறந்தாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சை விட்டகலாது.

'வாகையடி வீதி'
இமையாணன்,
உடுப்பிட்டி. (41084)(39-11-45-29) -குடும்பத்தினர்.

அறிமுகம்!!!
DISH TV மற்றும் KUBAND DTH

DISH TV
STAR Sports, Espn
SUN TV, JEYA TV,
பொதிகை உட்பட 100இற்கு
மேற்பட்ட சனல்கள் -KU band
Dish & LNBF Decorder
அனைத்தும Rs.17,500/=
மட்டுமே.

KU BAND DTH SUN TV,
பொதிகை உட்பட 35இற்கும்
மேற்பட்ட சனல்கள் KU band
Dish & LNBF Digital
Receiver அனைத்தும்
Rs 13,000/= முதல்

8அடி CBAND Digital
சிஸ்டம்
Rs.22,500/= மட்டும்.

10அடி CBAND System
Rs.28,500/=
மட்டுமே.

மற்றும் K TV Decorder, Smart Card, கேபிள் TV இற்குரிய அனைத்து உபகரணங்களும்
மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

செய்மதி தொலைக்காட்சி!

செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் TV துறைகளில்
இலங்கை முழுவதும் மிக நவீன தொழில்நுட்பத்தை
அறிமுகப்படுத்தி வரும் Sats - Tech நிறுவனம் தனது
சேவையை இலங்கை முழுவதும் NORTH LANKA
TELEVISION NET WORK (NLT NET WORK)
என்னும் பெயரில் விஸ்தரித்துள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. இலங்கையில் அதிநவீன
தொழில்நுட்பத்தின் மூலம் (Fiber Optical Technology)
கேபிள் TV இயக்குநர்களின் இன்னல்களுக்குத்
தீர்வை வழங்கிவருகின்றோம்.
யாழ். மாவட்டத்தில் எமது Fiber Optical MSOவில்
இணைந்து பயன்பெற உடன் தொடர்புகொள்ளவும்.

SATS - TECH ENGINEER'S
M/S நஷனல் வீடியோ சென்ரர் இல. 182, கே.கே.எஸ்.வீதி, (குளப்பிட்டி சேர்ச் அருகில்) கொக்குவில், யாழ்ப்பாணம்.

(C/40477)(12) Phone: (021) 222 5908 / 077 6618580 / 0777 251957 ISLAND wide Hot Line: 0777 710785



கொக்குவில் தாயுகம் சிறுவர் இல்ல நிர்வாகிகள், யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர் குழுவுடன் இணைந்து முல்லைத்தீவில் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினர். அத்துடன், நிவாரண மற்றும் மருந்துப் பொருள்களையும் வழங்கினர். மருத்துவர் ஒருவர் பாதிக்கப்பட்ட ஒருவருடன் உரையாடிச் சிகிச்சை அளிப்பதையும், 'தாயகம்' இல்ல நிவாரண அணி வாகனங்களையும் படங்களில் காணலாம். (ஐ-8)

# சுனாமி நஷ்டஈட்டுக்கொடுப்பனவுகள் வடக்கு-கிழக்குக்கு முழுமையாக இல்லை

## நிவாரண முத்திரையும் போதியளவு வரவில்லை

கொழும்பு,ஜன.21

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிர் இழந்தவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் தமிழ்ப் பிரதேசங்களில் முழுமையாக வழங்கப்படவில்லை. உயிரிழந்தவர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா கொடுக்கப்படவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இத்தொகை தென்பகுதியில் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் பத்தாயிரம் ரூபா வீதம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதுவும் உயிரிழந்தவர்கள் அனைவரின் குடும்பத்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று அகதிமுகாம்களிலும் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும் தங்கி இருப்பவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணக் கூப்பன்களும் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் வழங்கப்பட்டவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், இக்கூப்பன்களை மக்களுக்கு விநியோகிக்க முடியாதநிலையில் அதிகாரிகள் தடுமாற்றம் அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 850 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால், ஆயிரம் பேருக்கு மட்டுமே தலா பத்தாயிரம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1,850 பேருக்கு இழப்பீட்டுத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

சுனாமியால் வடக்கு - கிழக்கில் வீடு வாசல்களை இழந்து 2 இலட்சத்து 54 ஆயிரம் பேர் அகதிகளாகி உள்ளனர். ஆனால், 70 ஆயிரம் பேருக்கு மட்டுமே நிவாரண முத்திரைக் கூப்பன்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதனை எப்படிப் பாதிக்கப்பட்டோருக்கு விநியோகிப்பது என்பது புரியாமல் கச்சேரி அதிகாரிகள் தடுமாற்றம் அடைந்துள்ளனராம். (எ)

# மணற்காட்டில் 100 தற்காலிகக் கூடாரங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிறுவும்

யாழ்ப்பாணம்,ஜன,21

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிக் கரையோரப் பிரதேசத்தில் 100 தற்காலிக கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மத்திய சுற்றாடல அதிகார சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் மேற்கொண்டுவருகிறது.

சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்தை மறுசீரமைக்கும் வகையில் இந்தத் தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை - மத்திய சுற்றாடல் அதிகாரச சபையின் முன்னாள் தலைவரும், தற்போதைய ஆலோசகருமான அஜித் டி.கொலராவின் பணிப்பின் பேரில் அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட பகுதி மக்களுக்கு ஒரு தொகுதி உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என்றும் -

மருந்துப் பொருள்கள், கையுறைகள், பாதுகாப்பான உடைகள் உட்படப் பல பொருள்கள் இவ்வாறு சுகாதாரத் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டன என்றும் - கூறப்பட்டது.(எ-5)




ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நலன்கருதி யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்களை சிலிங்கோ கூட்டு நிறுவனம் வழங்கியது. சிலிங்கோ நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய டாக்டர் லலித் கொத்தலாவலவினால் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலிங்கோ கூட்டுநிறுவனத்தின் யாழ். கிளைகளின் உத்தியோகத்தர்கள் அந்தப் பொருள்களை யாழ்.ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

# தொற்றுநோய் ஏற்பட்டால் கட்டுப்படுத்த வன்னியில் ஏற்பாடுகள் எவையுமில்லை

## அரசைச் சாடுகிறார் சுகாதார ஊழியர் சங்கப் பிரதிநிதி

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி போன்ற அரசின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சுகாதார சேவை என்பது படுமோசமாகவே உள்ளது. தொற்றுநோய் ஏற்பட்டால் அதை கட்டுப்படுத்துவதற்கு எந்த விதமான ஏற்பாடுகளும் அங்கு இல்லை. இது வேதனைக்குரிய விடயம்.

வன்னியில் மருத்துவ முகாம்களை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய அகில இலங்கை சுகாதார ஊழியர் சங்கத்தின் அமைப்பாளர் சமன் ரத்னபிரிய வன்னியில் சுகாதார நிலைமைகள் பற்றி குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:

வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுகாதாரத் துறை பற்றி எப்படி விவரிப்பது என்றே தெரியவில்லை. வைத்திய வசதிகள் இன்றி மக்கள்படும் இன்னல்கள் எண்ணிப் பார்க்க முடியாதவை. அரச வைத்திய நிலையங்கள் முற்றாகச் செயலிழந்துவிட்டன. வைத்தியசாலை என்ற பெயரில் வெறும் கொட்டகைகளே அங்கு உள்ளன. இவற்றைச் சீர் செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்தச் சீர்கேடுகள் பற்றி புலிகளும் அக்கறை கொள்ளவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-க)

# ஆன்மீகம் ஆற்றுப்படுத்தும் ஆறு

தெய்வத்தைத் தொழுவதால், வழிபடுவதால், பிரீதி செய்வதால் மனிதனுக்குக் கிடைக்கும் பயன் யாது?

நாத்தழும் பேற நாத்திகம் பேசும் சிலர் தெய்வ நம்பிக்கையின் பயனைப் பற்றிக் கேலி பேசுவதாக எண்ணிக்கொண்டு செத்த பிறகு நரகத்திற்குப் போகாமல் சுவர்க்கத்தை அடைய சிபார்சு செய்வதுதான் தெய்வ நம்பிக்கையின் பயன்போலும் என்பர்.

ஆன்மீக வழிச் சான்றோர்கள் சுவர்க்கம் - நகரம் பற்றிப் பேசுகின்றார்கள்.

ஆன்மீகம் பற்றிக் குறிப்பிடும் நூல்களிலும் சுவர்க்கம் - நரகம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சுவர்க்கம் - நரகம் என்று தனித்தனியான உலகம் இருக்கின்றது என்றும் செத்தவர் தம் வினைப்பயனுக்கு ஏற்ப அந்தந்த இடங்களுக்குப் போகின்றார்கள் என்றும் ஆன்மீக வழியினர் செப்புவது ஒரு கருத்தேயாகும். ஆன்மீகச் செல்வர்களின் பொன்னுரைகளை ஆழ்ந்த கவனத்துடன் கற்பவர்களுக்கு இந்த உண்மை மிகத் தெளிவாக விளங்கும். அமைதி உடைய உள்ளத்தில் எழும் இன்ப உணர்வுகளை அனுவித்தவாறு நிம்மதியாக வாழுகின்ற ஒருநிலையைத்தான் சுவர்க்கநிலை என்றனர் அவர்கள். உள்ளத்தின் அலை மோதலுக்கு இலக்காகி மனத்தின் குரங்காட்டத்திற்கு ஆட்பட்டு நிம்மதியிழந்து தவிக்கும் ஒரு நிலையைத்தான் நரகம் என்று வரையறுத்தனர்.

வாழ்க்கையில் செல்வமும் செல்வாக்கும் பெற்று சுகமாக வாழும் ஒருவரைப் பற்றிப் பேச்சு வரும்போது அவர் என்ன சுவர்க்க வாழ்வு வாழ்கின்றார் என்று கூறுகின்றோம். வாழ்க்கையில் அளவிற்கு மீறிய கஷ்டநட்டங்களை அனுபவித்து தொல்லைப்பட்டு இருக்கும் அன்பர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவருடைய வாழ்க்கை நிலை எப்படி இருக்கின்றது என்று வினவுகின்றோம். என் வாழ்க்கையைப் பற்றியா கேட்கிறீர்கள்? நரக வாழ்க்கையல்லவா வாழ்கின்றேன் என்று அந்த அன்பர் மனக்கசப்புடன் கூறுவார்.

அதாவது, சுவர்க்கம், நரகம் என்பன அவரவர் அனுபவத்தை வைத்தே நிர்ணயிக்கப்படுகின்றன. ஓர் இன்பமயமான அனுபவத்திற்கு வழிகாட்டும் நெறிமுறையில்தான் ஆன்மீக நெறி இருக்கின்றது.

ஆன்மீக முயற்சிகளின் அடிப்படை நோக்கம் உள்ளத்தைப் பண்படுத்துவதுதான். உள்ளத்தை எவ்வாறு பண்படுத்துவது என்ற வினா எழும்போது ஆன்மீகம் - இறைவழிபாடு அதற்கான ஒரு வழிமுறை என்கின்றது. இறைவனுக்கும் அல்லது இறைமைக்கும் உயிர்களுக்கும் இடையில் ஊடுபாவாக விளங்கும் உண்மையினைச் சரிவர விளங்கிக்கொண்டோமானால் உள்ளத்தில் நிரந்தர அமைதி குடிகொள்ளும் என்பது ஆன்மீகத்தின் ஜீவநாடியான நோக்கமாகும்.

அச்சமும் குழப்பமும் கவலையும் தானே உள்ளத்தின் அமைதி சீர்குலைவதற்குக் காரணங்களாகும்.

இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்து எல்லாம் இறைவனின் செயலே என்று சரணாகதி அடைந்துவிட்டால் அச்சமோ, கவலையோ, மனக்குழப்பமோ தோன்றாது என்பது ஆன்மீகம் காட்டும் மார்க்கமாகும்.

பிரமாண்டமான இப்பிரபஞ்சத்தில் மனிதனுடைய இடத்தை என்னவென்று கணக்கிடுவது? அணுவினும் சிறியவன் என்றுதான் மனிதனைப் பற்றிச் சொல்லவேண்டும். நமது கண்ணோட்டத்தில் ஒரு சிற்றெறும்பு எப்படியோ அதைவிட மோசமான நிலையில் மனிதன் இருககின்றான். இவ்வளவு கேவலமான நிலையில் உள்ள மனிதன் என்ன அடிப்படையில் தன்னைத்தானே நம்பி தனது காலில் நிற்க முடியும்.

நமக்குப் பக்கத்துணையாக - நமது நலனை ஒவ்வொரு கணமும் கருத்துடன் நோக்கியவாறு ஒரு மகாசக்தி - ஒரு பேராற்றல் நம்மைச் சூழ்ந்து பரவி நிற்கின்றது என்ற எண்ணம் மனதில் நிலைப்படும்போது தான் நாம் அச்சத்தினின்றும் கவலையின்றும் விடுபடுகின்றோம்.

சாதாரணமாக உளவிலயல் கோளாறுகள் மனிதர்களிடையே நாற்பது வயதிற்கு மேல் தான் ஏற்படுகின்றன. அந்தப் பருவத்திற்கு பினபு தான் மனிதன் இந்த உலகத்தில் தன்னுடைய நிர்க்கதியான நிலையைத் தெட்டத் தெளிவாக உணர்கின்றான். குழந்தைப் பருவத்தில் அன்னையின் அரவணைப்பு மனிதனுடைய உள்ளத்திற்கு நிறைவைத் தருகின்றது. இளமையில் உலக இன்பங்களைத் துய்ப்பதால் உள்ளத்தில் நினைவு உண்

**ஞானக்கதிர்**

டாகின்றது. திருமணத்திற்குப் பின் மனைவியின் பாசவலை உள்ளத்தின் ஆறுதலுக்கு ஆதாரமாக அமைகின்றது.

இவ்வாறு உலக மாயைகளுடன் தொடர்பு கொண்ட காரணத்தால் தனது தனிமை இயல்பினை மறந்துவிட்டிருந்த மனிதன், நாற்பது வயதிற்குப் பின்னர் அவனைச் சூழ்ந்திருந்த மாயைத் தன்மை அகல, அகல தன்னுடைய தனிமையை அதிகமாக உணர்கின்றான். ஏதாவது, ஒரு பயன்கருதியே மற்றவர்கள் அவனை மதிக்கின்றார்கள் என்பதனையும் அந்தப் பயன் தன்னிடம் கிட்டவில்லை என்று தெரிந்தால் தன்னை ஒரு பொருட்டாகக் கருதாமல் உதறிவிட்டுவிடுவார்கள் என்பதனையும் அவன் உணர்கின்றான். தன்க்கு உண்மையான ஆதரவாக, பாதுகாப்பாக யாருமே இல்லை என்ற மனக்குமுறல் அவனுடைய உள்ளத்தில் அச்சத்தின் விதையை விதைத்து விடுகின்றது. குழப்பம் அவன் உள்ளத்தைக் கவ்விப்பிடிக்கின்றது உள்ளத்தின் அமைதி பறந்துவிடுகின்றது இப்போது தான் மனிதன் நரக வேதனையை அனுபவிக்கின்றான். இப்படிப்பட்ட ஒரு குழப்பமான மனநிலைக்கு ஆளாகும்போது மனிதனுக்கு உயிராசையே வெறுத்துவிடுகின்றது. இதனால், காரணமில்லாமல் சிலர் தற்கொலை செய்கிறார்கள்.

நமது நாட்டில் தெய்வ நம்பிக்கை ஒரேயடியாக அற்றுவிடவில்லை. இளமைப் பருவதில் ஒருவன் எப்படியாக வாழ்ந்தாலும் முதுமையில் ஓரளவாவது அவன் தானாகவே ஆன்மீக வழியைத் தேடிப்பிடித்து நடைபோடத் தொடங்கிவிடுகின்றான். இதனால், அவனிடம் மன அமைதி மீண்டும் வருகின்றது. மேலை நாடுகளில் தெய்வ நம்பிக்கை, பெரும்பாலும் அகன்றுவிட்ட காரணத்தால் அங்கெல்லாம் முதுமையில் தற்கொலை செய்வோர் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. தற்கொலை செய்துகொள்ளாதவர்களும் மது போன்ற போதைப் பண்டங்களைப் பயன்படுத்தி அறிவை மழுங்கடித்து அந்த நிலையில் அச்சத்தை, மனக்குழப்பதை மறக்க முயல்கின்றார்கள்.

இந்தவிதமான உளவியல் குறைபாடுகளைத் தவிர்த்து வாழ்நாள் முழுவதும் உள அமைதியுடன் வாழ்வதற்கு ஆன்மீக நெறியும் தெய்வநம்பிக்கையும்தான் சரியான மார்க்கம் என நமது முன்னோர்களான அறிஞர்கள் கண்டறிந்தனர்.

**பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

ஆன்மீக வழி நடத்தல் என்பது ஒருவகையான மனோதத்துவ சிகிச்சை என்றே கொள்ள வேண்டும். மிகவும் எளிதாக, ஒரு செலவும் இல்லாமல் எந்த மருந்தும் சாப்பிடாமல் உள்ளத்தை எப்போதும் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வைத்துக்கொள்வதற்கு ஆன்மீக வழி ஒன்றோ சிறந்ததாகும். ★

# சண்டே லீடர் ஆசிரியர் லஸந்த நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு,ஜன.21

'த சண்டேலீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க மேல் முறையீட்டு நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜரானார். கடந்த 18ஆம் திகதி அவருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

லஸந்த அன்றைய தினம் மன்றில் ஆஜராகியிருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படிச்செய்யவில்லை.

வெளிநாடு சென்றிருந்ததால் அன்றைய தினம் அவரால் மன்றில் ஆஜராக முடியவில்லை என அவரது சட்டத்தரணி மன்றில் தெரிவித்திருந்தார். மன்றின் அனுமதியின்றி வெளிநாடு சென்றதால் அவருக்கு எதிராக நீதிமன்று பிடியாணை பிறப்பித்தது.

கிரிக்கெட்சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால தொடுத்திருந்த வழக்கிலேயே லஸந்தவிற்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

திலங்கவிற்கு எதிரான வழக்கு ஒன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேளை நீதிமன்றுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் லஸந்த அது பற்றித் தமது பத்திரிகையில் விமர்சனக் கட்டுரை எழுதியிருந்தார். அப்படிச் செய்தமை நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் எனத் தெரிவித்தே மேல் முறையீட்டு மன்றில் மனுத் தாக்கல் செய்தார் திலங்கசுமதிபால.

இந்த வழக்கு விசாரணைக்கு, விமானம் தாமதித்ததால் லஸந்தவால் உரிய நேரத்திற்கு மன்றில் ஆஜராகியிருக்க முடியவில்லை என அவரின் சட்டத்தரணிகள் நேற்று மேல் முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தனர். மன்று அதனை ஏற்றுக்கொண்டு அவருக்கு எதிரான பிடியாணை உத்தரவை ரத்துச் செய்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-8)

# சட்டவிரோத மின் இணைப்புப்பெற்ற 13 பேருக்குத் தலா 15 ஆயிரம் அபராதம்

## மல்லாகம் நீதிமன்று விதித்தது

யாழ்ப்பாணம்,ஜன.21

சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பெற்ற 13பேருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் தலா 15ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார்.

நேற்று முன்தினம் சுன்னாகம் மின் அத்தியட்சகர் தலைமையிலான குழு, இளவாலை பொலீஸாரின் உதவியுடன் பெரியவிளான், சிறுவிளான், அளவெட்டி வடக்கு, பன்னாலை ஆகிய இடங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போதே சட்ட விரோதமாக மின்பெற்றவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பொ.முருகதாஸ், ம.மகேந்திரா, சா.கந்தசாமி, சி.சற்குணராஜா, பொ.துரைசிங்கம், சி.கிருபா, சி.பிரபா,செ.விக்கினேஸ்வரன், க.காந்தன், க.கிருஷ்ணமூர்த்தி, செ.யோகேஸ்வரன், க.செல்வராஜா, க.சோதிகந்தவேள் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுத் தண்டம் விதிக்கப்பட்டது. தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் பட்சத்தில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என்று நீதிவான் எச்சரித்து இவர்களை விடுதலை செய்தார். (எ-202)

## மூன்று குளங்கள் புனரமைக்கப்படும்

வலிதென்மேற்கு, ஜன.21

யாழ்.மாநகர சபைப் பகுதியில் கொழும்புத்துறை, அரியாலை, ஈச்சமோட்டை ஆகிய இடங்களிலுள்ள பால்குளம், நெடுங்குளம். உப்புக்குளம் ஆகிய மூன்று குளங்களும் ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

யாழ்.அரச செயலக நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்ட அலுவலகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் இக் குளங்களின் புனரமைப்பு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்றுள்ளது. (எ-135)

## நலன்புரிமுகாம்களில் சுகாதாரத் தொண்டர்கள்

வடமராட்சி,ஜன.21

வடமராட்சி வடக்கு கரையோரப்பகுதி மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் சுகாதாரப் பணிகளை முன்னெடுப்பதற்காக சுமார் 300சுகாதாரத் தொண்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணியின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டபணியாளர்களுக்குக் குறுகியகாலப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கடந்த திங்கள் முதல் சுகாதாரப் பணிகளில் இவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.(எ-173)

## முல்லைத்தீவை நோக்கி பிக்குமார் ஊர்வலம்

கொழும்பு, ஜன.21

இலங்கை பௌத்த மகா சங்கத்தின் பிக்குகள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் 26ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளது.

இக்குழு தென்னிலங்கையில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடையவுள்ளதாக மாதம்பாஹம அசசிதேரர் தெரிவித்துள்ளர்.

சுனாமியால் பாதிப்படைந்த மற்றும் அழிவுற்ற வணக்க ஸ்தலங்களின் விவரங்களையும் இவர்கள் திரட்டவுள்ளனர்.(10-13)

பாலர் பாடசாலை
ENGLISH MEDIUM
தைப் பூசம்
வித்தியாரம்பம்
British Business School
B.B.S 174,Kandy Road, Jaffna 021-2225796

### சுனாமியால் பாதிப்படைந்த

# கீரிமலைக் கேணியையும் கட்டடங்களையும் புனரமைக்க 73 லட்சம் ரூபா தேவை

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட கீரிமலைக் கேணியையும் மற்றும் அதனைச் சூழவுள்ள கட்டடங்களையும் புனரமைபுச் செய்வதற்கு 73 லட்சம் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தில அமைந்துள்ள கீரிமலைக்கேணி, பிதிர்க்கடன் செலுத்தும் மடம், மின்பிறப்பாக்கி அறை, மின்சார உபகரணங்கள் மற்றும் கடல் அணைச் சுவர் ஆகியன மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான மதிப்பீட்டை வலி. வடகுப் பிரதேச சபையினர் மேற்கொண்டதைத் தொடர்ந்தே புனரமைப்பதற்கு 73 லட்சம் ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் நீராடும் பகுதியின் நாலுபக்கச் சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (10-86)

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

| நான்காம் வருடம் | | | முதலாம் வருடம் | | |
|---|---|---|---|---|---|
| மலர்வு 14 – 01 – 1918 |  | உதிர்வு 05 – 02 – 2001 | அன்னையின் மடியில் 18 – 06 – 1916 |  | அமலன் பாதத்தில் 10 – 12 – 2003 |
| | அமரர் செல்லையா இராசதுரை | | | திருமதி பாக்கியம் இராசதுரை | |

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

இ.பரிபூரணம்,
வத்தனை வளவு,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

– குடும்பத்தினர்.

(41081)(21-45)

இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா !

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visa க்களைப்பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் BSc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப்பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.



இ.விஜயஷங்கர்
யாழ்ப்பாணம்.

துரிதமான தொழில்நுட்ப மாற்றங்கள் வாழ்க்கை நியமங்கள் பலவற்றை மாற்றியுள்ளது. நேற்று சாத்தியமானவை இன்று சாத்தியமற்றதாகி விடுகிறது.எனவே கடந்தகாலம் எதிர்காலம் என்பவற்றுக்கிடையில் நின்று சிந்திக்கும் போது வணிகக் கற்கைத்துறையைக் கற்ற எனக்கு கணனிக்கற்கை நெறியில் ஆர்வம் ஏற்பட்டது. எனது ஆர்வத்தை சாத்தியமாக்கும் வகையில் IIS இனால் அறிமுகப்படுத்தப்பட்ட HND சர்வதேச தரம்வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி கை கொடுத்தது. இதனால் பேரார்வத்துடன் இக்கற்கை நெறியைப் பயின்று வருகிறேன். என் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இக்கற்கைநெறி தந்த திறன் என்னை சர்வதேச சமூகத்துடன் இணைத்துக்கொள்ள வழிவகுத்துள்ளது. எனது தொடர்கல்வியை வெளிநாட்டில் தொடரவுள்ளேன்.



ச.ஷாமினா
கொக்குவில்.

நான் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பிரிவைச் சேர்ந்த மாணவனாக இருந்தும் எனது எதிர்காலத்தின் தேவையை உணர்ந்து (வேலை வாய்ப்புக்கள்) கணனித்துறையினைத் தெரிவு செய்தேன். அதற்காக வடக்குக் கிழக்கில் எனது துறைசார்ந்த கல்வியை மேற்கொள்ள IIS நிறுவனத்தினால் நடாத்தப்படும் HND கற்கை நெறியினைத் தெரிவு செய்தேன். இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்ததும் சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் 3ம் வருட கல்வியைத் தொடரவுள்ளேன்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

BSc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK,USA,Australia,Canada etc

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

Batch II
பிரிவு II விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

edexcel INTERNATIONAL
Approved Training Centre


INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road, Jaffna.
P No. : 021 222 2831 / 021 222 6933

# சிங்களப் படைகளை கிடுகிடுக்க வைத்த மாபெரும் சாதனையாளன் கேணல் கிட்டு

## அவருடன் பழகிய நினைவுகளை மீட்டுகின்றார் ஈழவேந்தன் எம்.பி.

'மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்திரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விவரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோகநிகழ்வு. அதனைத் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்று



ணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால், அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான்; போர்க் களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் மீது ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலின் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

'கிட்டு, நீ சாகவில்லை

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கின்றாய்' என்று எங்கள் தேசியத் தலைவர் தன் கண்கள் கலங்கிய நிலையில் விடுத்த செய்தி வரலாற்றில் இடம்பெறும் ஓர் இரங்கல் செய்தியாக விளங்குகின்றது.

### இதயத்தைப் பிழிந்தெடுக்கும் இரங்கல் செய்தி

தலைவர் பிரபாகரனுக்கும் நம் தளபதி கிட்டு அவர்களுக்கும் இடையில் நிலவிய உளம் தோய்ந்த உறவுதான் இவரை இவ்விதம் பேச வைத்தது. கிட்டு மறைந்தபோது பலர் உள்ளம் உருகி நிகழ்த்திய உரைகள் - விடுத்த செய்திகள் பலவுண்டு. ஆனால், எம் தலைவர், கிட்டு பற்றி கூறிய கூற்று அனைத்து இரங்கல் உரைகளையும் விஞ்சும் அளவிற்கு உள்ளது. கிட்டு அவர்களை, எம் தலைவர் போல் இன்னொருவர் படம் பிடித்து காட்டமுடியாத அளவிற்கு இவரின் சொற்றொடர்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துள்ளது. இவரின் கூற்று 'கிட்டு ஒரு தனிமனித சரித்திரம், நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எம் விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு' என்று அவரின், இரங்கல் உரையில் வரும் இப்பகுதியை நாம் மீண்டும் மீண்டும் நினைக்கின்றபோது எவ்வளவு பொருள் பொதிந்தவையாக இருப்பதைக் காண்கின்றோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வஞ்சச் செயலால் வங்கக் கடலில் பூகம்பமாக கிட்டுவின் ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது என்று மேலும் பிரபாகரன் கூறியுள்ள கூற்றுக்கள் தூங்கிக் கிடந்த தமிழினத்தைத் துடித்தெழச் செய்துள்ளது.

### படுகுழியில் தள்ளிய பாரதத்தாய்

பாரதத்தாயின் அரவணைப்புடன் என்றும் வாழ விரும்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு அடுத்தடுத்து விழுந்த இடியாக இச்செயல் அமைந்துள்ளது. 1987 இல் செப்ரெம்பர் 26இல் அண்ணல் காந்தியை மிஞ்சுகின்ற அளவிற்கு அறப்போரில் ஈடுபட்டு உண்ணாநோன்பு நோற்ற தியாகி திலீபனின் உயிரைப் பறித்தது இந்தியத் துணைக் கண்டம். அடுத்து அதே ஆண்டு ஒக்ரோபர் 12இல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வேங்கைகளின் உயிர் பறிபோவதற்கு முழுக் காரணமாக இருந்தது. நாம் நம்பி ஏமாற்றப்பட பாரதத்தாயே காரணம் என்பதை நினைவில் வைத்தல் நலம்.

'வல்வெட்டித்துறையில் நாங்கள் வளர்த்த சிதை நெருப்பில் 12 புலிகளும் ஒன்றாய்ப் படுத்ததை நெஞ்சம் மறக்குமா' என்ற உணர்ச்சியுடன் மேலெழுந்த பாடல் 'கொள்கையின்படி நஞ்சைக் குடித்தபின் சாய்ந்த... இளமையில் சருகாகி போனவரே எம் இதயத்தில் உருவான கோயில்களே...' என்று கண்ணீர் விட்டுக் கதற வைக்கும் முறையில் எம் உயிரோடு ஒட்டியதாக எழுந்துள்ளது.

போர் சூழ்ந்த நிலையிலும் அமைதி காண முயன்ற மேஜர் ஜோனியை வரவழைத்து இந்தியப் படைகள் அவரைக் காட்டுக்குள் வைத்து சுட்டுக்கொன்றதை நாம் மறப்பதற்கில்லை. அண்மையில் கருணா என்ற கருநாகம் படமெடுத்து ஆட பின்னணியின் காரணமாக அமைந்தது இந்தியாவின் உளவுப்படை (RAW) என்பதையும் எமது புலனாய்வுப் பிரிவு கண்டுள்ளது. படமெடுத்து ஆடிய கருணா என்ற கருநாகம் இப்பொழுது எங்கே என்பது தெரியாத நிலையிலும் இக்கருநாகத்திற்கு தஞ்சம் கொடுத்துள்ளது இந்தியா என்பதையும் நாம் ஊகிக்க இடமுண்டு.

தமிழீழத்தைப் பிரகடனம் செய் - என்று வரதராஜ பெருமாளுக்கு கட்டளையிட்ட இந்திய அரசு அது எடுபடாத நிலையில் அவரை இந்தியாவிற்கு அழைத்து எத்தனை ஆண்டுகள், எத்தனை கோடி ரூபாய்கள் செலவழித்து அவருக்கு தஞ்சம் வழங்கியுள்ளது என்பதை நாடும் நானிலமும் அறியும். அதேவேளையில் இந்திய மண்ணிலே ஏதிலியாக (அகதியாக) வாழ்ந்த என்னை தமிழீழத்தை ஓங்கி ஒலித்த ஒரே குற்றத்திற்காக இரவோடிரவாக 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தியதை ஈழத்தமிழர்கள் மன்னித்தாலும் மறக்கமாட்டார்கள்.


### கப்பலில் தீக்கிரையான கிட்டுவும் ஒன்பது தோழர்களும்

எம் தளபதி கிட்டுவின் தியாகத்தை நாம் உச்சி மீது வைத்து உவந்து போற்றுகையில் அவருடன் தமது உயிரை மாய்த்துக் கொண்ட பின்வரும் ஒன்பது போராளிகளாகிய குட்டிசிறி, வேலன், ஜீவா, குணசீலன், ரொசான், தூயவன், நல்லவன், அமுதன் என்போரை நம் நெஞ்சிலேற்றி நன்றியோடு நினைவுகொள்வோமாக

### ஆந்திரா நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

தளபதி கிட்டுவையும் அவரோடு இணைந்த வீரர்களையும் இந்தியப் பெருங்கடலில் தடுத்த நிறுத்திய இந்தியக் கடற்படை கூறிய காரணம் இந்திய நீர் எல்லைக்குள் கிட்டுவும் கிட்டுவின் தோழர்களும் புகுந்தனர் என்பதே ஆகும். ஆனால் இவர்கள் கூறிய கூற்று, கூசாது கூறிய பொய்மையாகும். உண்மையில் கிட்டுவும் அவர்களது தோழர்களும் நங்கூரமிட்டு நிறுத்திவைத்த கப்பல் இந்திய நீர் எல்லைக்குள்ளேயோ இலங்கை நீர் எல்லைக்குள்ளேயோ இருக்கவில்லை. மாறாக அனைத்துலக நீர் எல்லைக்குள்ளேயேதான் (International territorial waters) நின்றது என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

கிட்டுவும் தோழர்களும் இந்திய அரசு ஏற்படுத்திய நெருக்கடிகாரணமாக ஜனவரி 16ஆம் திகதி 1993இல் தம் கப்பலோடு தம்மை தீயிட்டு மாய்த்துக்கொண்ட போது இச்சதிச் செயலை எதிர்த்து பழநெடுமாறனால் வழக்குத் தொடுக்கப்பட்டது. மிகக் காலம் கடந்த நிலையில் ஆந்திர நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பில் கிட்டுவும் அவருடன் வந்த போராளிகளும் அனைத்துலக நீரெல்லைக்குள்தான் இருந்தார்கள். அவர்களைச் கைப்பற்ற முயன்று அவர்களின் சாவிற்கு காரணமாக விளங்கிய இந்திய



அரசை ஆந்திர நீதியரசர் வன்மையாகக் கண்டித்துள்ளார். இவ்வழக்கில் மிக தீவிரமாக ஈடுபட்டிருந்த நெடுமாறன் அவர்கள் எதற்கும் எளிதில் கண்கலங்காத இப்பெருமகன். இந்தியாவின் இச்சதி வேலையை ஒட்டி என்னிடம் விவரங்களைக் கூறியபோது கண்கலங்கிய காட்சி கல்மனைதையும் கசிந்துருகச் செய்யும்.

### நான் கண்ட தளபதி கிட்டு

1987இல் இந்திய அரசு தமிழகத்தில் தளபதி கிட்டு அவர்களை வீட்டுக் காவலில் வைத்திருந்தபோது என்னைச் சந்திக்கும்படி அழைப்பு விட்டிருந்தார். நான் வந்த செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டவுடன் தன்னை காவலில் வைத்திருந்தவர்களை திசை திருப்பி தாம் வீற்றிருந்த மாடிக்கு என்னை அழைத்துச்செல்ல துரித ஒழுங்குகளைச் செய்தார். அவருடன் ஒரு மணி நேரம் மனம்விட்டுப் பேசிய நிகழ்ச்சியை எண்ணும்போது எத்தகைய பெரிய போராளியை - எத்தகைய பெரிய சிந்தனையாளனை தியாகச் செம்மலை நாம் இழந்துவிட்டோம் என்று பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் நாம் எண்ணிப் பார்க்கின்றோம் என்றால் அவர் சாதாரண மனிதர் அல்லர் என்பதனை எமக்கு நினைவுபடுத்துகின்றார். இதனை எவர் தான் மறுக்கமுடியும்.

★

# தலைவர் பிரபாகரன் பற்றிய செய்திகள் அரசியல் லாபத்துக்கான விசமப் பிரசாரம்

## கண்டிக்கிறார் ம.ம.முன்னணித் தலைவர்

கொழும்பு,ஜன.21

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைப் பற்றி அரச சார்பு ஊடகங்கள் தேவையற்ற வதந்திகளைச் செய்தியாக்கிக் கொண்டிருப்பது அரசியல் லாபத்திற்காக நடத்துகின்ற விசமப் பிரசாரமென மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக ஆயிரக்கணக்கான மக்கள் அவலப்படும் இந்த நேரத்தில் இத்தகைய செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்க எத்தனிப்பதை நியாயப்படுத்த முடியாத அநாகரிக செயலாகவே சிறுபான்மையினத் தமிழர்கள் கருதுவார்கள்.

சுனாமிப் பாதிப்பினை சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையை இரண்டாம் பட்சமாக புறம்தள்ளவே அரசு எத்தனிக்கின்றது.

எந்தத் தனிமனிதரின் உயிரிழப்பினாலும் ஐம்பது வருடகால அரசியல் போராட்டம் முடிவுக்கு வரப்போவதில்லை என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய பிரசார முயற்சிகளினால் போராட்ட உணர்வும், வேகமும் அதிகரிக்குமேயன்றி சிறிதும் நிலைகுலையாது, அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கோ, அமைப்பின் முக்கியஸ்தர்களுக்கோ எந்த உயிராபத்தும் இல்லை என்பதனையும் புலிகள் ஆணித்தரமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடியாகப் பார்வையிட்ட செய்தியை வெளிநாட்டு ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கும் இந்நேரத்தில் அரச ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் அதிருப்தியை மேலும் அதிகப்படுத்திக் கொள்வதாகவே அமையுமென்று ம.ம.மு. அரசிடம் வலியுறுத்துகின்றது என்றும் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (க-8)

# மையக்கிராமங்கள் தெரிவுசெய்வதை மாவட்டச் செயலகம் ஆரம்பித்தது

வலி.மேற்கு,ஜன.21

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் கட்ட நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய மையக் கிராமங்களைத் தெரிவு செய்வதற்கு அரச அதிபர் கே.கணேஸ் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ். மவாட்டத்தில் உவர் நீர்த்தடுப்புகள், குளங்கள், வெள்ள வாய்க்கால்கள் ஆகியவற்றின் புனரமைப்பும், கிராமங்களின் புனரமைப்பும் தனித்தனியான செயற்பாடுகளாக செயற்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை இரண்டாம் கட்ட நியாப் திட்டத்தில் இந்த ஆண்டில் புனரமைப்பு செய்யப்பட்வேண்டிய கிராமங்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் அரச அதிபரினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய கிராம அமைப்புக்களோ, கிராமத்தவரோ, கிராம அபிவிருத்தியில் அக்கறையுடைய எவருமோ கிராமமொன்று புனரமைக்கப் படவேண்டி இருப்பின் தமது பூரண முகவரியைக் குறிப்பிட்டு தங்கள் பிரிவு பிரதேச செயலாளருக்கு நேரடியாகவோ அல்லது கிராம மட்ட உத்தியோகத்தர் ஊடாகவோ எழுத்துமூலமான கோரிக்கையை அனுப்பி வைக்க முடியும் - என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கோரிக்கையை அனுப்பியவர்களுக்கான விண்ணப்பப்படிவம் பிரதேச செயலாளரால் அனுப்பிவைக்கப்படும் என்றும் -

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 07.02.2005இற்கு முன்னதாக பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-175)

# 276 மீனவக் குடும்பங்களுக்கு சுழிபுரத்தில் விசேட நிவாரணம்

வலிமேற்கு,ஜன.21

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 276 மீனவக் குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்கான விசேட நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வலிமேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் எடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சுழிபுரத்தைச் சேர்ந்த மீனவக் குடும்பங்கள் தமது முழுமையான மீன்பிடி உபகரணங்களை இழந்தமை தெரிந்ததே.

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் இலவச உலர் உணவு நிவாரணத்துடன் மேலதிகமாக இந்த விசேட நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

(எ-175)

# நீரிறைக்கும் இயந்திரம் மூலம் வலி.மேற்கு வயல்களுக்கு நீர்

வலிமேற்கு,ஜன.21

வலி.மேற்குப் பிரதேசத்தில் நெற்பயிர்களுக்கு விசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலம் நீரிறைத்து வருகின்றனர்.

வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களிலுள்ள பெருமளவு வயல் நிலங்களில் நெற்பயிர்களுக்கு போதியளவு நீரின்மையினால் விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரிறைத்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வருடம் என்றுமில்லாதவாறு பெருமளவு மழை பெய்தும் கதிர்வரும் நேரத்தில் வயல் நிலங்களில் நீர் இல்லை என்றும் வாய்க்கால்கள், பாலங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமையினாலேய இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் - விவசாயிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

வலி.மேற்குப் பிரதேசத்தில் உள்ள சில பாலங்களில் நீரைத் தடுப்பதற்கான கதவுகள் குறிப்பிட்ட காலத்தில் பொருத்தப்படவில்லை என்றும் விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

(எ-175)

# நெஞ்சை விட்டு நீங்காத ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## மாணிக்கம் நடராசா

(உரிமையாளர், நடராஜா அன்ட் கோ).

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21-07-1933 | 03-02-2004 |

சென்ற இடம் திரும்பும் வரை வாசலிலே காத்திருப்போம் - அப்பா
இன்று சென்ற இடம் தெரியாமல் தவிக்கின்றோம் ஏந்தலே - அப்பாவே!
எம்மைப் பிரிந்தீர்கள்? பன்னிருமாதமாய் தவிக்கின்றோம்
பெருமையுடன் வாழ்ந்த எங்கள் வாழ்வுடன்
பெருந்திக்கு விருந்தான தேனோ அப்பாவே?
பெற்றானாய் பற்றானாய் பெருமையுறு வர்த்தகராய்
"நடராஜா & கோ" என்ற ஸ்தாபனத்துக்கே - மேன்மையாய்
கற்றானாய்! தலைவனாய்! கண்ணிறைந்த - செம்மலாய்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தேவரோடு - தேவராய் நின்று
உங்கள் பணி நாம் தொடர எம்மை - ஆசீர்வதியுங்கள் அப்பா!

12/1, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(41121)

# விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்



| முளையாக | விதையாக |
|---|---|
| 20.06.1922 | 21.01.2002 |

"சீவியத்தில் நேசித்தோம
மரணத்திலும் மறவோம"
அன்புக்கோர் இருப்பிடமாக
பண்புக்கோர் இலக்கணமாக
பாசத்திற்கோர் உறைவிடமாக
பொறுமைக்கோர் பொக்கிஷமாக
வாழ்ந்த அம்மம்மாவே!.......
என்றும் உங்களை மறவோம்.
விண்ணக வாழ்வை ஏகி மூன்றாம்
ஆண்டில் உங்களை நினைவு
கூருகின்றோம்.

திருமதி

## மார்க்கண்டு - அன்னப்பிள்ளை மேரி திரேசா

("ராஜ்மலா" மாகியம்பதி)

தகவல்:
கு.கோடன்
(பிரான்ஸ்)

என்றும் அன்பான
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(41007)





அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 8 வயதுக்குட்பட்டோருக்கான மினி டெனிஸ் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி இரண்டாவது தடவையாகச் சம்பியனாகியுள்ளது.

இறுதியாட்டத்தில் குருநாகல் மாலிக தேவா பாடசாலை அணியை 4-3 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்று யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது.

8 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் அணி இறுதியாட்டத்தில் இரத்தினபுரி மாவட்ட அணியைச் சந்தித்தது. இந்த ஆட்டத்தில் 4-3 என்ற புள்ளி அடிப்படையில் இரத்தினபுரி மாவட்ட அணி வெற்றியீட்டிச் சம்பியனாகியது. ஆண்களுக்கான போட்டியில் சம்பியனாகிய யாழ். மவாட்ட அணியினரையும் -

பெண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற யாழ். மாவட்ட அணியினரையும் படங்களில் காணலாம். (10-190)

# இலங்கை அணி வீரர்கள் நியூசிலாந்து சென்றனர்.

கொழும்பு,ஜன.21

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி சேகரிக்கும் முகமாக நியூ சிலாந்து கிரிக்கெட் அணிக்கும் உலகத் தெரிவு அணிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வதற்காக இலங்கை கிரிக்கெட் அணியின் நான்கு வீரர்கள் நியூ சிலாந்து சென்றுள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய, குமார் சங்ககார, சமிந்த வாஸ், முரளிதரன் ஆகிய நான்கு வீரர்களே அங்கு சென்றுள்ளனர். (10)

# மீண்டும் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ். மாவட்டத்தில் மீண்டும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது என்று யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (10-190)

# கிரிக்கெட் வீரர்களின் தரவரிசையை ஐ.சி.சி.விரைவில் வெளியிடும்

லண்டன்,ஜன.21

சர்வதேச கிரிக்கெட்சபை கிரிக்கெட் வீரர் களின் தரவரிசைப் பட்டியலை முதன்முறை யாக அறிவிக்கவுள்ளது.

2001 ஆம்ஆண்டு டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் நாடுகளின் தரவரிசைப் பட்டி யலைக் கிரிக்கெட் சபை வெளியிட்டது. அதன பின்னர் 2002 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டி களுக்கான தர வரிசைப்பட்டியலை அது வெளியிட்டது.

ஆனால், வீரர்களின் தரவரிசைப்பட்டியலை வெளியிடுவது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வந்ததாகவும் தற்பொழுது இது நடைமுறைகபு வரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து இந்திய அணியின் முன் னாள் தலைவர் சுனில் கவாஸ்கரும் தற்போ தைய தலைவர் சௌரவ் கங்குலியும் மகிழ்சசி தெரிவித்துள்ளனர். இதேபோன்று எல்.ஜி. எனப் படும் உலக இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமும் இவ்வாறு தரவரிசைப் பட்டியலை வெளியிடவுள்ளது.

தற்பொழுது நாடுகளின் தரவரிசைப் பட்டி யலில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி ஆகிய இரண்டிலும் ஆஸ்திரேலிய அணியே முதலிடத்தில் உள்ளது. பந்துவீச்சில் ஆஸ்தி ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ராத்தும் துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் துணைத்தலைவர் ராகுல் ட்ராவிட் டும் முதலிடத்தில் உள்ளனர். (10)




# பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளை யாட்டுக் கழகம் நடத்திவரும் பட்மின்ரன் போட்டி இன்று காலை 9 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் 12, 14 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கான போட்டி கள் நடைபெறும் என்று போட்டிக் குழுத் தலை வர் மோகன் தெரிவித்துள்ளார். (10-190-5)

# கரப்பந்தாட்டப் போட்டி

வலி.மேற்கு,ஜன.21

சங்கானைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி யின் கரபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாக வுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குச் சங்கானை வை.எம்.எச்.ஏ. மைதானத் தில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. இப் போட்டியில் 12 விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன.

ஆண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அராலி, மாவத்தை விளையாட்டு மைதானத்தில் ஆரம்ப மாகவுள்ளது. இப்போட்டியில் 13 விளையாட் டுக் கழகங்கள் கலந்துகொள்ளவுள்ளன.(10-175)

# சுனாமி அனர்த்த நிதி சேகரிப்பு உதைபந்தாட்டம் பெப்.15 இல்



சூரிச்,ஜன.21

சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்ட கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்படுகின் றது. இதில் ரொனால் டினோ லெவன் மற்றும் ஆன்ட்ரி ஷெவ்சென்கோ லெவன் அணிகள் மோதுகின்றன. இந்த இரு அணிகளில் ரொனால்டோ, பெக்காம், ரால், கபு என உலகின் நட்சத்திர வீரர்கள் அனைவரும் இடம்பெற்றுள்ளனர்.

2004 டிசெம்பர் 26இல் சுனாமி பேரலைகள் தெற்காசிய நாடுகளை உலுக்கியது. இதில் லட்சக்கணக்கானோர் பலியாகினர்.

பெருமளவில் பொருள் சேதமும் ஏற்பட் டது. இந்தப் பேரழிவில் பாதிக்கப்பட்ட மக் களுக்கு விளையாட்டு உலகம் கைகொடுத்து வருகிறது. சமீபத்தில் சுனாமி கிரிக்கெட் போட்டி மூலம் 100 கோடி ரூபாவரை நிதி திரட்டப்பட் டது. இப்போது கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தச் சர்வதேச உதைபந் துக் கூட்டமைப்பு முன் வந்துள்ளது. இப் போட்டி அடுத்த மாதம் 15 இல் ஸ்பெயின் தலைநகர் பார்சிலோனாவில் நடக்கிறது.

இதில் ரொனால்டினோ ஆன்ட்ரி, ஷெவ் சென்கோ தலைமையிலான அணிகள் மோது கின்றன. இந்த மகத்தான போட்டியில் விளை யாட உலகின் சிறந்த 52 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவின் சிறந்த வீரர் விருதை வென்ற ஷெவ்சென்கோவின் அணியில் இங்கிலாந்தின் டேவிட் பெக்காம், ஸ்பெயினின் ரால், பிரான்சின் ஜிடேன், தியரி ஹென்றி, ஜேர் மனியின் மைக்கல் பிளாக், இத்தாலியின் ராபர்ட்டோ பாகியோ, பிரான்செஸ்கோ டோட்டி உட்பட பல பிரபலங் கள் இடம்பெற்றுள் ளனர்.

'பிபா' சிறந்த வீரர் விருதை வென்ற ரொனால்டினோ தலை மையிலான அணி யில் பெரும்பாலும் பிரேசில் வீரர்களே காணப்படுகின்றனர்.

ரொனால்டோ, ரொனால்டினோ என இருவரும் அணியில் இருப்பது சிறப்பம்சம்.



இவர்களைத் தவிர பிரேசிலின் கபு, லூசியொ, ஜப்பானின் நகாதா, ஆர் ஜென்டினாவின் சேவியர் ஜெனட்டி உட்படப் பல முன்னணி வீரர்கள் உள்ளனர். இந்த போட் டிக்கு 'நம்பிக்கை தரும் உதைபந்து' என்று பெயரிடப்பட்டுள்ளது. (10)





# விளையாட்டு மைதானப் புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபா

கரவெட்டி,ஜன.21

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத் தின் கூடைப்பந்தாட்ட மைதானத்தைப் புனர மைப்புச் செய்வதற்கென ஒரு லட்சத்து 50 ஆயி ரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் அனுசரணையுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து இது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு தற்போது மைதானப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ். சேதுராஜா தெரிவித்துள்ளார். (10-203-70)

## அமரர் ஆனந்தராஜா நினைவாக உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.21

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளத்தின் உப தலைவரும் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிநிதியுமான அமரர் ஜே.எஸ்.என். ஆனந்தராஜா ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் சேகரிக்கப்படும் பணம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் கௌரவ செயலாளர் மு.பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (10-190)



வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட 18 வயதுப் பிரிவுப் பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனான மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரைப் படத்தில் காணலாம். (10)

# விவரங்கள் அனுப்பவும்

யாழ்ப்பாணம்,ஜன.21

வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது கழகங்களுக்குத் தேவையான விளை யாட்டு உபகரணங்கள் மற்றும் அவை தொடர் பான விவரங்களைப் பட்டியலிட்டுப் பிரதேச சபைக்கு அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ் கேட்டுள்ளார்.(10-185)

# விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.21

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் வருடந் தோறும் நடத்திவரும் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாப கார்த்த கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ள இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி, யாழ். பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி, கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, ஜொலி ஸ்ரார்ஸ் விளை யாட்டுக் கழக அணி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற வுள்ள முதல் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் ஜொலிஸ்ரார்ஸ் அணியும் மோதவுள்ளன.

பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் யாழ். பற்றீசியன் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.(10)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கிறிஸ்ரி ஜோசேப்**
(உதவி மதுவரி ஆணையாளர், வடபிராந்தியம்)



**திரு. என். சோதிநாதன்**
( மதுவரி அத்தியட்சகர், யாழ்.மாவட்டம்)

திரு. கிறிஸ்ரி ஜோசேப் அவர்கள் வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளராகவும் திரு. நா.சோதிநாதன் அவர்கள் யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகராகவும் பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்கள் இருவரும் மேலும் மேலும் பதவி உயர்வுகள் பெற்று உயர்வடைய எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி
நல்லூர்.

உரிமையாளர்:ஐ.விக்னேஸ்வரன்
மெற்றோ வைன் ஸ்ரோர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கணக்குப் பதியுநராகக் கடமையாற்றும் *திரு எஸ். முருகானந்தன்* அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு.கந்தையா செல்லையா

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த வேதனையையும் கவலையையும் அளித்துள்ளது. அவரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச்சங்கம்,*
*உதவி அரச அதிபர் பணிமனை,*
*தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.*

உதவி அரச அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.
(சி-40562)(43-11-45)

உ

# யா/அத்தியார் இந்துக்கல்லூரி
# நீர்வேலி

## பவளவிழா நிறைவு நிகழ்வுகள்

**முதலாம்நாள் நிகழ்வுகள் 21.01.2005 வெள்ளி மு.ப.9.30 மணி**

இடம்: **கல்லூரி பிரார்த்தனை மண்டபம்**

தலைவர்: **திரு.இ.குணநாதன்** (கல்லூரி முதல்வர்)

பிரதம விருந்தினர்: **திரு.இந்திரன் காராளசிங்கம்**
(தொழிலதிபர், கொழும்பு)

சிறப்பு விருந்தினர்கள்: **திரு.பொ.சிவசுப்பிரமணியம**
(உறுப்பினர், பழைய மாணவர்
நலன்விரும்பிகள் சங்கம் U.K.)
**திரு.ஆ.கணபதிப்பிள்ளை** உறுப்பினர்,
நீர்வேலி நற்பணிச் சங்கம், சுவிஸ்)

கௌரவ விருந்தினர்கள்: **திரு.க.சங்கர்** (பொறுப்பாளர்,
வலி.கிழக்கு அரசியல்துறை)
**திரு.இ.கிருபானந்தன்** (இணைப்பாளர்,
நீர்வேலி நற்பணிச் சங்கம், சுவிஸ்)
**திரு.ச.புவிச்சந்திரன்** (உரிமையாளர்,
வினோ நகைப்பூங்கா, யாழ்ப்பாணம்)

ஆசியுரை: **பிரம்மஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள்**
(உப தலைவர் ப.வி.சபை)

வரவேற்புரை: **கலாநிதி தா.அமிர்தலிங்கம்** (பிரதி அதிபர்)

பரிசளிப்பு: *பவளவிழாவையொட்டி, பாடசாலை, கோட்ட மட்டங்களிலும் கழகங்களுக்கிடையிலும் நடத்தப்பட்ட பல்வேறு வகையான போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.*

நன்றியுரை: **திரு.சு.சண்முகவடிவேல்**

**இரண்டாம்நாள் நிகழ்வுகள்: 22.01.2005**
**சனிக்கிழமை பி.ப.2.30 மணி**

பிரதம விருந்தினர்: **திரு.ப.விக்கினேஸ்வரன்**
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)

சிறப்பு விருந்தினர்கள்: **திருமதி அ.சாந்தசீலன்**
(பிரதேச செயலர், கோப்பாய்)
**திரு.இ.சிவஞானசுந்தரம்** (கோட்டக் கல்வி அதிகாரி, கோப்பாய)

கௌரவ விருந்தினர்கள்: **திரு.சி.இளம்பரிதி**
(யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்)
**திரு.பொ.சிவதாசன்** (உப தலைவர்,
பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கம் U.K.)

வரவேற்புரை: **திரு.சி.தர்மரத்தினம்** (பொருளாளர், ப.வி.சபை)

## பவளவிழாச் சிறப்புமலர் வெளியீடு:

இதழாசிரியர் உரை: **திரு.ஐ.சிவராஜா**

மலர் ஆய்வுரை: **கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா**
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

மலர் வெளியீடு: **பிரதம விருந்தினர்**

நன்றியுரை: **திரு.த.பரராஜசிங்கம்** J.P. ப.மா.ச. உறுப்பினர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நீர்வேலி. **கல்லூரிச் சமூகம்.**
(41125) (26-43-16)

# மருந்தாளர் பயிற்சி நெறி மீண்டும் ஆரம்பம்

குருநகர்,ஜன.21

சுனாமி அனர்த்தம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வெளிவாரி மருந்தாளர் பயிற்சி நெறி மீண்டும் நாளை சனிக்கிழமை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது என பயிற்சி வகுப்பின் அமைப்பாளர் அறிவித்துள்ளார்.

பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் அனைத்துப் பயிற்சியாளர்களையும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனைக்கு தவறாது சமுகம் தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-51)

# குடும்பவிவரம் சேகரிப்பு

நவாலி,ஜன.21

நவாலி கிழக்கில் வறுமைக் கோட்டின் கீழ வாழும் குடும்பங்களின் விவரங்கள் சமுர்த்தி உத்தியோத்தரால் சேகரிக்கப்படுகின்றன.

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களிடம் மேற்படி தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக அப பகுதி சமுர்த்தி அலுவலர் மேரி ஸரெலா தெரிவித்தார்.

(எ-100-ரி)

# பத்திரிகையாளர் கார்மேகம் காலமானார்

யாழ்ப்பாணம்,ஜன.21

பத்திரிகையாளர் S.M.கார்மேகம் தனது 65 ஆவது வயதில் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை சென்னையில் காலமானார்.

பத்திரிகைத்துறையில் நீண்டகாலம் சேவையாற்றி வந்தவரான இவர் சமூக, கலை, கலாசாரப்பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

1960 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை இவர் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் பணியாற்றினார்.

S.M.கார்மேகம் வீரகேசரி நாளிதழில் மலையகப்பதிப்பின் பொறுப்பாசிரியராகவும் பணிபுரிந்தார். இவரது எழுத்திலும் பேச்சிலும் சமூக உணர்வே மேலோங்கிக் காணப்படும்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயலை அடுத்து இவர் வீரகேசரியில் இருந்து விடை பெற்றுக்கொண்டு தமிழ்நாடு சென்றார். அங்கு சென்னை தினமணிநாளிதழின் செய்தி ஆசிரியராகக் பதவியேற்று தமிழகப்பத்திரிகையாளர் சம்மேளனத்தில் ஒரு முக்கிய உறுப்பினர் ஆனார்.

இவர் கண்டி மன்னர்கள், ஒரு நாளிதழின் நெடும்பயணம் ஆகிய நூல்கள் உட்பட மூன்று நுல்களை எழுதியுள்ளார்.

கொட்டகலை கல்மதுரைத் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை சென்னை ராஜப்பேட்டை பீப்பிஸ் கொலனி பொதுமயானத்தில் நடைபெற்றன.

(எ-203)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

உளநலசங்கம், தெல்லிப்பழை

காலம்: **22.01.2005**
*சனி பி.ப.3.00 (பு.நே.)*

இடம்: **மாவட்ட வைத்தியசாலை**
*- தெல்லிப்பழை.*

தலைமை: **திரு.N.கனகரத்தினம்.**

சங்க உறுப்பினர், ஆர்வலர்கள் கலந்து கொண்டு புதிய நிர்வாகத்தெரிவினை மேற்கொண்டு, சங்கவளர்ச்சிக்கு உறுதுணை புரியவேண்டுகின்றோம்.

(41131) - செயலாளர்.

# மனித உரிமைகள் கற்கை நெறி
## யாழ்ப்பாணம்

மக்கள் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய அறிவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் மனித உரிமைகள் இல்லம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மனித உரிமைகள் கற்கை நெறி பயிலரங்குகளை நடத்திவருகிறது.

யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கவுள்ள இப்பயிலரங்குகள் ஒரு மாதத்திற்கு இரு நாள்கள் (சனி, ஞாயிறு) என்ற ரதியில் ஆறு மாதங்களுக்கு நடத்தப்படவுள்ளது. முற்றிலும் இலவசமாக் நடத்தப்படவுள்ள இப்பயிலரங்கில் பங்குபற்றவிரும்புவோர். சுய விவரத்துடன் 28.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

**முகவரி:**
இணைப்பாளர்,
மனித உரிமைகள் இல்லம்,
இல. 58, (பழைய இலக்கம்),
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 021 2227576.
(41141)(43-11-15)

## 19.10.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200000000 இலிருந்து 200023901 வரை

சீட்டிழுப்பு இல. 1574
திகதி 19.01.2005

**14 21 45 50** சுப்பர் எண் **15**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.27,49,700/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 27,49,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 03 | 10,00,000/- | 30,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 37 | 5,000/- | 1,85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 644 | 1,000/- | 6,44,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 2118 | 500/- | 10,59,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 31255 | 40/- | 12,50,200/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 29740 | 20/- | 5,94,800/- |
| 1 வெற்றி எண்கள் மட்டும் | 4,44,264 | 10/- | 44,42,610/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.1,16,75,610/-

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 39,37,050/-**

தொடர் இல. 300000000 க்கு மேற்பட்டபச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 22 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

200011136-0-60
200022132-7-58
200004575-2-08
200008637-2-41
200004409-2-78

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 06 - 1924



இறப்பு 21 - 01 - 2004

## அமரர் சின்னையா மார்க்கண்டு (மார்க்)

(பெயின்ரஸ் மார்க் பிறதர்ஸ்)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறிடுமோ எம்மனம்?
ஈண்டு உமது நினைவாகவே இங்கு நாமிருக்கிறோம்
மாண்டு நீர் போனதால் மனமும் புண்ணாச்சுதே
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இல.346, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (41118)(26-43-16)

**து.யோகாதேவி** (வவா - மகள்),
**நா.துரைசிங்கம்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா தெய்வானை



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.50/3 முதலாம் ஒழுங்கை,பருத்தித்துறை வதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா தெய்வானை 19.01.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/3.முதலாம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41135) (43-16)

தகவல்:
க.நித்தியானந்தன் (கிராம அலுவலர் - மருமகன்).

## துயர் பகிர்வு

எமது பள்ளியில் பணியாற்றும்
திருமதி நீ.தர்மகுலசிங்கம் அவர்களின் தாயார்

### இராஜதுரை நாகம்மா

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

பள்ளிக்குழுமம்
**யா/பெரியபுலம் ம.வி.**
(41145) (14-17) யாழ்ப்பாணம்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12-06-1918 மறைவு 17-01-2000

அமரர்
### சுப்பிரமணியம் அம்பலவாணர்
(சட்டத்தரணி)

ஆண்டுகள் ஐந்து உருண்டோடிப் போனாலும்
ஈண்டு உமது நினைவுடனேயே நாம் வாழ்கிறோம்
எப்போதும் உமது திருமுகந்தான் கண்முன் தெரிகிறதே!

தகவல்:
*புத்தூர் கிழக்கு,* மக்கள், பேரப்பிள்ளைகள்,
*புத்தூர்.* (41140) (14-17) வி.சுலோசனாதேவி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள்

1. கலைமுதற்தேர்வு - 2002 & 2003 (க.பொ.த(உ.த)2001 மற்றும் 2002)
2. வணிகமுதற்தேர்வு - 2002 & 2003 (க.பொ.த(உ.த)2001 மற்றும் 2002)
3. வணிகமாணி - பகுதி I - 2002
4. வணிகமாணி - பகுதி II - 2002
5. வணிகமாணி - பகுதி III - 2002

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா50/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி, விவரங்கள் விரைவில் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர் *நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா50/- இற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 16.50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் ***உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 25.02.2005 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**குறிப்பு**: மீள்பரீட்சார்த்திகள் (**கலைமுதற்தேர்வு - 2001**) உரிய பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.

**வெளிநிலை தேர்வுநாடிகளின் பதிவேடுகள்**
கலைமுதற்தேர்வு கல்வியாண்டு 2002/2003
வணிக முதற்தேர்வு கல்வியாண்டு 2002/2003
கலைமாணி பகுதி I கல்வியாண்டு 2002/2003
நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) 2002/2003

மேற்படி கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடிகளாகப் பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 25.01.2005 செவ்வாய்க்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு**: பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும் கல்வித் தகைமைச் சான்றிதழினதும் (க.பொ.த. உயர்தரம்) மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்காதோர் அவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி-40556) (14-17) **-துணைவேந்தர்.**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை கந்தையா

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தையா அவர்கள் மலேசியாவில் நேற்றுமுன்தினம் (19.01.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுலோசனாவின் அன்புக் கணவரும் சந்திரா, இந்திரா, டாக்டர் ரவிச்சந்திரன் (மலேசியா), வசந்தி (லண்டன்), ரேவதி, ராஜேஸ் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற முருகேசு (நாகலிங்கம்), சிவக்கொழுந்து (சரஸ்வதி), இராசையா, தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணபதிப்பிள்ளை தருமலிங்கம் (சகோதரன்),
*59/3,* மைத்துனி திருமதி தருமலிங்கம்
*குமாரசுவாமிப் புலவர் வீதி,* விமலேஸ்வரி (குஞ்சாப்பிள்ளை),
*சுன்னாகம்.* (41149)(14-17-29) (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்).

## வல்லைப் பாலம் சனியிரவு மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.21

திருத்த வேலை காரணமாக வல்லைப் பாலத்தினூடாகப் போக்குவரத்துக்கள் நாளை சனிக்கிழமை இரவு 8.30 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை 5.30 மணிவரை தடைப்பட்டிருக்கும் என்று சாலை திருத்த வேலைகளுக்குப் பொறுப்பான செயற்றிட்டப் பொறியியலாளர் எம்.தில்லைநாதன் அறிவித்துள்ளார்.

(எ-202)

## கண்ணப்பநாயனார் குருபூசை தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.21

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்படும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் நாளை சனிக்கிழமை காலை கண்ணப்பநாயனார் குருபூசை நடைபெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அரிவாட்ட நாயனார் குருபூசை இடம்பெறும்.

(எ-202-152)

## கைமாறிவிட்டது

19.01.2005 புதன்கிழமை காலை 7-9 மணிக்கிடையில் அச்சுவேலிப் பகுதியில் பூட்டற்ற துவிச்சக்கர வண்டி ஒன்று கைமாறிவிட்டது. தயவுசெய்து கைமாறிக் கொண்டு சென்றவர்கள் அவ்விடத்திலோ அல்லது 0776 503137 என்ற இலக்கத்திலோ தொடர்பு கொண்டு தமது துவிச்சக்கரவண்டியை மாற்றிக்கொள்ளவும். (41068)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாணத்தில் சுகாதாரப் பிரிவு நிர்வாகத்தில் நியமனம் கிடைத்த கலைப்பட்டதாரி ஒருவர் வேறு ஏதாவது ஒரு நிர்வாகத் துறையிலோ அல்லது ஆசிரியத் துறையிலோ நியமனம் கிடைத்த ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: (41116)
T.P 021 222 2541, 021 222 2845


## பொருளியற் கல்லூரி

A/L 2006
**கணக்கீடு**
சொத்து முடிவு செய்தல் கணக்கு
யாழ்.நகரில் 10-11 a.m.
இணுவிலில் 2-3 p.m.
By: Mr. முகுந்தன்
B.B.A. (Hons) F.M. Spl.
ஆரம்பம்: 22.01.2005 சனி.

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன் (இருவேடம்)
லைலா
வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
ANACONDA - 2 (C/39654)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், மஞ்சுளி நடித்த
ஆயுதம்

கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயனதாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்

ஐயா இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
(C/39654)


## கண்ணீர்க் காணிக்கைகள்

யாழ்.றோட்டறிக் கழகத்தின் பொருளாளர்
Rtn. திருமதி நீ.தர்மகுலசிங்கம் அவர்களின் தாயார்

### திருமதி இராஜதுரை நாகம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**யாழ்.றோட்டறிக்கழகம்**
(சி-40564) (14-17) 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் கணக்குப் பதியுநராகக் கடமையாற்றும் செ.முருகானந்தனின் அன்புத் தந்தையார்

### கந்தையா செல்லையா

அவர்களின் மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறைப் பிரதேச
செலயகத்தில் கடமையாற்றி தற்போது
பிரதேச செயலகம், காரைநகர் பிரதேச செயலகத்தில்
காரைநகர். (சி-40567)(14-17) கடமையாற்றும் உத்தியோகத்தர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### ஜோசப் விக்ரர் ஆனந்தராசா

வவுனியா, இறம்பைக்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோசப் விக்ரர் ஆனந்தராசா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்) நேற்று (20.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் விக்ரோறியா - ரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் பிபியானா தவரத்தினத்தின் அன்புக் கணவரும் அமலவளன் (இறுதி வருட மாணவன், சட்டவியல் கல்லூரி), அமலினி (கல்வியியற்கல்லூரி மாணவி), நிமலினி (மாணவி, இறம்பைக்குளம் ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அளவெட்டியைச் சேர்ந்த பந்திநாதர் - காலஞ்சென்ற மரியம்மாவின் மருமகனும் அருட்தந்தை தேவராஜா, பவளம் றோபேட், காலஞ்சென்ற வில்வரராஜா, சாந்தம் யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம், அருட்சகோதரி புளோறினா, நவரட்ணம், குணரட்ணம், தனரட்ணம், அருட்தந்தை ஜெபரட்ணம், விமலரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.01.2005) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி-40568) (14-17) மனைவி, பிள்ளைகள்.

### திருமதி தையல்நாயகி அப்புத்துரை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி அப்புத்துரை அவர்கள் நேற்றுமுன்தினம் (19.01.2005) புதன்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை மாஸ்டர் அவர்களின் துணைவியாரும் Dr. பிறைசூடி (அமெரிக்கா), Dr.சாந்தாதேவி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலநாதன் (பொறியியலாளர் - இந்தியா), செல்வராணி (அமெரிக்கா) ஆகியோரின் மாமியும் சிவதி, சங்கமன், கேயோன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் சிறி பிரேமானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறிபிறேமானந்தா ஆச்சிரமம்,*
*பிறேமானந்தா நகர்,*
*பாத்திமாநகர் அஞ்சல்.* தகவல்:
*T.P. : 0091 2650464* (சி-40565) (14-17) திருமதி நடராஜா.

### கந்தையா சுந்தரமூர்த்தி

அறுகம்புலம், காரைநகரைச் சேர்ந்த கந்தையா சுந்தரமூர்த்தி 19-01-2005 புதன்கிழமை இயற்கையெய்திவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா சவுந்தரத்தின் அன்பு மகனும் கனகலட்சுமியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார், சுகந்தகுமார், சுரேசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, செல்லம்மா, Dr.ஏரம்பு, பாக்கியம், காலஞ்சென்ற ஓவசியர் செல்வரத்தினம், நடராசா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோவளத்தைச் சேர்ந்த கந்தையா - பராக்கிரமதேவி தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-01-2005) வியாழக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அறுகம்புலம், காரைநகர்.* (41143)(14-17-29) குடும்பத்தினர்.

### நாகமணி கணேசன் (ஆசாரி)



காளிகோயிலடி, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, கரம்பொன் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான நாகமணி கணேசன் (ஆசாரி) அவர்கள் நேற்று (20.01.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.105, முதலாம் குறுக்குத் தெரு,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (41148)(14-17-29) மனைவி, பிள்ளைகள்.

# ஐ.தே.கவின் ஆதரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுவருகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உட்பட பல்வேறு தரப்புகளிடமிருந்து சர்வதேச மட்டத்தில் நிவாரண உதவிகள் கிடைத்துவருகின்றன. அந்த உதவிகளில் ஒவ்வொரு டொலரும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே நேரடியாகச் சென்றடையவேண்டும். ஆனால், இந்த நிவாரணங்கள் எவையும் தமக்குக் கிட்டவேயில்லை என்றே பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் வடக்கு - கிழக்கு மாகாணம் உள்ளடங்கலாக அனைத்து அனர்த்தப் பிரதேசங்களுக்கும் சென்று விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

இப்பொழுதும்கூட அகதிமுகாம்களில் இருப்பவர்கள், தொண்டர் அமைப்புக்களினதும் தனியாரினதும் உதவியுடனேயே உயிர் வாழ்கின்றனர். அரசு அறிவித்துள்ள நிவாரணங்கள் பேச்சளவில் மட்டுமே. அரச உதவிகள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என்றே இந்த மக்கள் முறையிடுகின்றனர்.

அரசியல்வாதிகளும், அமைச்சர்களும் வருகின்றனர்; போகின்றார்கள். ஆனால், அரச உதவி சம்பந்தப்பட்டோருக்குக் கிடைக்க அவர்கள் எதையும் செய்யவில்லை.

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்கள், காணாமற்போனவர்கள், உடைமைகளை இழந்தவர்கள் மற்றும் தொழில் இழந்தவர்களின் விலாசங்களை எந்த ஓர் அதிகாரியும் நேரடியாக வந்து பெறவில்லை. தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளின் உண்மைநிலை வெளிப்படுத்தப்படவில்லை என்பதே பாதிப்புற்ற மக்களின் ஆதங்கம்.

அரசு அன்றாடம் வெளியிட்டுவரும் இழப்பீட்டு விவரங்களும் சரியானவை அல்ல. குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்தபடி தயாரிக்கப்பட்ட விவரங்களே அவை.

இதனால் பாதிக்கப்பட்ட தங்களுக்கு எந்த நன்மையும் கிட்டப்போவதில்லை என்றே அம்மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

எனவே, உயிரிழப்புகள், பாதிப்புகள் தொடர்பாக அரசு சரியான விவரங்களைத் திரட்ட வேண்டும். அதற்கு ஐ.தே.க. முழு ஆதரவையும் வழங்கும் - என பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

ஜனாதிபதியால் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் மீள்கட்டமைப்புக்கான பாரிய வேலைத் திட்டம், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் உடனடித்தேவைகளைப் பூர்த்திசெய்வதாக அமையவில்லை.

வீடிழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். படகுகளையும், வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, குடிதண்ணீர், சுகாதாரம் போன்ற அத்தியாவசிய விடயங்கள் உடனடியாக வழங்கப்படவேண்டும். இழந்த வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். இவைதான் இன்றைய உடனடித் தேவைகள்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு அரசுகளைவிட அந்நாடுகளின் மக்களே கூடுதலான மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளனர். இவை பாதிக்கப் பட்ட மக்களுக்கே நேரடியாகக் கிடைக்கவேண்டும் என்பதுதான் அந்தமக்களின் எதிர்பார்ப்பு.

இன்னும் ஆறு மாதங்களுக்குள் அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும். அவர்களுக்குப்பழைய வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். - இப்படி ஐ.தே.க. காலக்கெடு விதித்துள்ளதாகவும் பேராசிரியர் பீரிஸ் கூறினார். (த-க)

# பேரலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர் கிழக்கிற்குச் சென்றது. செல்லும்வழியில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மஹிந்தபுர இராணுவச் சோதனை நிலையம், கிளிவெட்டி மற்றும் கட்டைபறிச்சான் இராணுவ முகாம்கள் ஆகியவற்றைக் கடந்தே அது சென்றது.

நிகழ்வின் இறுதியில், சம்பூர் மாவீரர் துயிலும் இல்லத்தில் எழிலரசன் நினைவுக் கல் நாட்டப்பட்டது என இடக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நினைவு நிகழ்வில் கரும்புலிகளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி புனிதா, புலிகளின் ஈச்சிலம்பற்றுப்பிரிவு அரசியல் பொறுப்பாளர் தங்கன் அடங்கலாகப் பலரும் தத்தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

புலிகளின் திருகோணமலை அரசியல் பொறுப்பாளர் எழிலன் அங்கு உரையாற்றினார். (த-க-12)

# பேக்கரிகளுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்தின் விருப்புக்கேற்றவாறு அரசு செயற்படமுடியாது. இன்னும் ஒருசில தினங்களில் எமக்குத் தேவையான மா இறக்குமதி செய்யப்படும். அதைக் குறைந்த விலைக்கு பேக்கரிகளுக்கு வழங்குவதே அரசின் திட்டம் - என்றார்.

பேக்கரிகளுக்கு கோட்டா அடிப்படையிலேயே இப்போது கோதுமை மாவை பிறிமா நிறுவனம் வழங்கிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (த-க)

# நோர்வேக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மும், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் இணைந்துகொண்டனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனும் இக்குழுவினரோடு வருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் நேற்றுக் காலைவரை வந்து சேரவில்லை. நேற்றிரவு அவர் கொழும்பு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

நோர்வேக் குழுவினர் நேற்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ரவூப் ஹக்கீம் எம்.பி. தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர், நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரதி அமைச்சர் டி.எம்.தஸநாயக்க தலைமையிலான அமைச்சுக் குழுவினர் எனப் பல தரப்பினரையும் சந்தித்துப் பேசினார்.

நோர்வேக் குழுவினர் நாளை காலை வன்னிக்குச் செல்கின்றார்கள். அங்கு முல்லைத்தீவு உட்பட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களை அவர்கள் பார்வையிடுவர். பின்னர் தலைவர் பிரபாகரன் தலைமையிலான புலிகளின் உயர் மட்டக் குழுவினரோடு அவர்கள் பேச்சு நடத்துவர்.

இச்சந்திப்பில் பங்குபற்றுவதற்காகப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியாரும் நேற்றிரவு லண்டனிலிருந்து கொழும்புக்குப் புறப்படவிருந்தனர்.

இன்றுகாலை 9.35 மணியளவில் கட்டுநாயக்காவை வந்தடையும் அவர்கள், உடனேயே ஹெலிக்கொப்டர் மூலம் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-க)

# இயற்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கின்றன.

நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் மத்தியில் தீவிரமாகப் பரவியிருக்கும் இத்தகைய வதந்திகள் அங்குள்ள சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் பீதியான மனநிலையைத் தோற்றுவித்திருக்கின்றது என்று நலன்புரி முகாம் களுக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடமராட்சியிலும் முல்லைத்தீவிலும் பல நலன்புரி முகாம்களில் இத்தகைய வதந்திகள் பரவியுள்ளன என்றும் -

இவை மக்கள் மத்தியில் திட்டமிட்டுப் பரப் பப்பட்டவையாகக் கூட இருக்கலாம் என்றும் - அவர் தெரிவித்தார்.

பொதுவாக இயற்கைப் பேரனர்த்தம் நிகழ்கின்ற நாடுகளில் அதன் பிறகு இது போன்ற பீதியூட்டும் எதிர்பார்ப்பு மனநிலை மக்கள் மத்தியில்தோன்றுவது வழக்கம். என்றாலும், இயற்கைப் பேரனர்த்தங்களை அவதானிக்கின்ற அல்லது அவை குறித்து முன்னெச்சரிக்கை செய்யவேண்டியதரப்புகள் பொதுமக்கள் மத்தியில் காணப்படும் தேவையற்ற பீதிகளைப் போக்கும் வகையில் உண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தற்போது பரவியிருக்கும் வதந்திகளை வெறும் வதந்திகள் என்று ஒதுக்கிவிடாமல் அவை பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கங்களை அளிக்க வேண்டியது சம்பந்தப்பட்டோரது பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ-12)

# பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காகத் தனியான அனுமதிப் பரீட்சை நடத்தப்படும் எனவும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறும் எனவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் விசேட பரீட்சை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-க)

# புனரமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கான உதவிகள் விடயத்தில் தனது கரிசனையை வெளிப்படுத்தும் நீண்ட அறிக்கையொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டிருக்கின்றது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நாட்டின் பல பகுதிகளிலும் நலன்புரி முகாம்களிலும் தங்கும் இடங்களிலும் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழு -

நாட்டை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசும் ஏனைய பங்காளிகளும் எந்த வகையான அரசியல் மற்றும் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாது கூடியவரையில் இணைந்து செயற்படவேண்டும் என்றும் கேட்டிருக்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் முழுவிவரம் பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ-7)

அன்றும்... இன்றும்... இனி என்றுமே...
விக்னா கல்வி நிறுவனம்
பொருளியல்
திரு.K.உதயன்
A/L 2006
பிரிவு I - சனி, ஞாயிறு 11.30 - 12.30
பிரிவு II - சனி, ஞாயிறு 08.30 - 09.30
புதிய பிரிவு 3
ஆரம்பம்: 22.01.2005 சனி, ஞாயிறு 7 – 8 மணி
A/L 2005
சர்வதேச வர்த்தகம் சனி, ஞாயிறு 10.30 – 11.30
சந்தை சமநிலை வரைபு சனி, ஞாயிறு 12.30 – 1.30
புதிய பிரிவு ஆரம்பம்
சனி, ஞாயிறு 4 - 5 மணி (மாலை)
A/L 2005 DAY CLASS
திங்கள், புதன், வெள்ளி காலை 7 மணி
அரச பாதீடும் குறிக்கோளும்
A/L 2007
பிரிவு I – சனி, ஞாயிறு 9.30 – 10.30
பிரிவு II வெகுவிரைவில் ஆரம்பமாக இருக்கிறது.
(சி-40493)

ஆசிரியர் தேவை
Eng.Lit. - 10/11, Eng-5,6.
H.P.E. - 6,7.
GRADE - 5
SCHOLAR SHIP
I.B.S.
சுண்டுக்குளி. (c/40527)

வணிகக் கல்வி
முன்னோடிப் பரீட்சை-2005
★ பகுதி I,II அடங்கலான 6 பரீட்சைகள்
★ வெளி நிறுவன மாணவர்களும் தோற்றலாம்.
By: S.யசோ
★ அனுமதிகளிற்கான நிலையங்கள்:
★ விக்னா ★ நிரு ★ பிறைற்றின்
★ BEACON ★ ஸ்ரார் (சாவகச்சேரி)
★ அனுமதிக்கான இறுதித் திகதி: 27.01.2005
Note:
★ விடைத்தாள் திருத்தி மீளளிக்கப்படும். (41109)

தேவை
ஓட்டோ ஓட்டுநர் வாகன அனுமதிப் பத்திரத்துடன் தேவை.
(மாநகரசபைக்கு உட்பட்டவர்)
தொடர்பு:
ஏசியன் தளபாடம்
133, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் அருகில்)
யாழ்ப்பாணம்.
T.P.: 0777-536108 (c/40566)

புதிய பிரிவுகள் ஆரம்பம் !
அனைத்துக் கற்கைநெறிகளுக்குமான அடுத்த பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன
பகல்நேர வகுப்புக்கள்: 23-01-2005 காலை 9.00 மணி
இரவுநேர வகுப்புக்கள்: 22-01-2005 மாலை 6.00 மணி
ஆரம்பமாகும் கற்கைநெறிகள்
Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing (Online)
Diploma in AutoCAD (Online)
Diploma in Computer Hardware
Diploma in Programming
Diploma in Multimedia (Online)
Diploma in Internet Technology (Online)
& Certificate Courses

இலவச Floppy/CD, Handouts.
ஆழமான கற்பித்தல்!
அதிகூடிய செய்முறைப்பயிற்சி!!
அளவான கட்டணம்!!!
காலம் 3 மாதம்
பதிவுகளுக்கும் விசாரணைகளுக்கும....
eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
உடுவில் வீதி, மருதனார்மடம் 021-4590222

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா செல்லையா



கருங்காலியைப் பிறப்பிடமாகவும் இல.961, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பதுளைச் செல்லையா என்று அழைக்கப்படும் கந்தையா செல்லையா (முன்னாள் உரிமையாளர், செல்லையா ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்) அவர்கள் நேற்று (20.01.2005) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் முருகானந்தன் (உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை B.K.), புவனேஸ்வரி, கதிர்காமநாதன் (ஸ்ரீநாதன் களஞ்சியம், இல. 961, K.K.S. வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராதேவி, நடராசா (தீபிகா களஞ்சியம், நெல்லியான் வீதி, சுழிபுரம்), சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுலன், கோபிகா, தீபிகா, சுகிஜா, மயூரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை சபாபதி லேன், கொக்குவிலில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் (பு.நே) பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலையாளி வைரவர் கோயிலடி,*
*பூநாறிமரத்தடிச் சந்தி,*
*சபாபதி லேன்,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
(சி-40553)(30)

### திருமதி இராசம்மா நடராசா



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராசா அவர்கள் நேற்று (20.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும் செல்வராசா, இராஜேஸ்வரன், சரோஜினிதேவி, விக்னேஸ்வரி, இன்பரதி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோண்மணி, லீலோ, விஜயசிங்கம், நித்தியானந்தன், குகதாஸ், சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஒஸ்கா லேன்,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (31150)(30)

தகவல்:
நித்தியானந்தன்
(சின்ராசு).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.